# நிறைவுரை

தற்காலத்தில் மக்கள், கீதையின் பல்வேறு உரைகளை எல்லாம் படித்துக் கொண்டு, அவற்றில் ஏதேனும் புதிய விஷயங்கள் கிடைக்குமா என்றெல்லாம் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் உண்மை என்பது என்னவோ ஒன்றுதான். அது ஒருபோதும் புதியதாவதும் இல்லை, அதேபோன்று பழையதாகிப் போவதும் கிடையாது. தினசரி செய்தித் தாள்களில் வேண்டுமானால் அன்றாடம் நிகழும் பிறப்பு இறப்பு செய்திகளையும், புதிது புதிதாகக் கிளம்புகின்ற பல்வேறு விதமான விஷயங்களையும் அச்சிடலாம். உண்மை என்றும் மாறாதது எனும்போது, அதைப் பற்றிப் புதிதாகவும் வேறுவிதமாகவும் சொல்வதற்கு என்ன இருக்கிறது? ஒரு வேளை யாராவது அப்படிச் சொன்னால், அவன் அந்த உண்மையை அடையவில்லை என்பது தெளிவு. ஒவ்வொரு மகாபுருஷரும், ஒருவேளை ஆன்மீகப் பாதையில் சென்று அந்த இலட்சியத்தை அடைந்து விட்டார்களேயானால், அதைப் பற்றி ஒரே மாதிரியான கருத்தையே வெளியிடுவார்கள். அவர்கள் சமுதாயத்திற்கு (மத்தியில்) நடுவில் பிரிவினையை ஏற்படுத்துவதில்லை. அப்படி ஒரு வேளை யாரேனும் பிரிவினையை உண்டாக்கினால், அவர் இலட்சியத்தை அடையவில்லை என்பதும் தெளிவாகிறது. ஸ்ரீகிருஷ்ணரும், முற்காலத்தவர் கண்டறிந்த அதே உண்மையையே கூறுகிறார். இனி, எதிர்காலத்தில் வரப்போகும் மகாபுருஷர்களும் ஒரு வேளை இதே உண்மையை அடைந்தார்களேயானால் இதையேதான் கூறுவார்கள்.

**மகாபுருஷர் மற்றும் அவருடைய ஆன்மீகச் செயல்பாட்டியல்:–**

மகாபுருஷர் இவ்வுலகில் உண்மையின் பெயரால் நிலவிவருகின்ற, மற்றும் உண்மையைப் போலவே தோற்றமளிக்கின்ற தவறான நெறிமுறைகளை அழித்தவாறே, மேலான நன்மையை உண்டாக்கவல்ல பாதையை அமைத்துத் தருகிறார்கள். அந்தப் பாதையும் கூட இவ்வுலகில் ஏற்கனவே இருந்த ஒன்றுதான். ஆனால், அதையொத்த, அதைப்போலவே தென்படுகின்ற பல்வேறு பாதைகள் வழக்கத்திற்கு வந்து விடுகின்றன. அவற்றிலிருந்து உண்மையான, பாதையைப் பிரித்து அறிவது மிகவும் கடினமாகி விடுகிறது. உண்மையில், ''எது உண்மை?'' என்பதை அடையாளம் காண முடிவதில்லை.

மகாபுருஷர்கள் அந்த உண்மையில் நிலைபெற்று இருக்கின்ற காரணத்தால், அவை எல்லாவற்றிலும் இருந்து ''எது உண்மை?'' என்பதைத் தெளிவாக அறிந்தே இருக்கின்றனர். அதை உறுதிப்படுத்தவும் செய்கிறார்கள். மேலும் அந்த உண்மையை நோக்கிச் செல்லுமாறு சமுதாயத்தினரையும் தூண்டுகின்றனர். ஸ்ரீராமர் இதையே செய்தார். இதையேதான் மகாவீரர் செய்தார்.

மகாத்மா, புத்தரும் இதனையே செய்தார். இதையேதான் இயேசு கிறிஸ்துவும் செய்தார். இதே முயற்சியைத்தான் முகம்மது பெருமகனாரும் செய்தார். கபீர், குருநானக் முதலானோரும் இதையேதான் செய்தனர். மகாபுருஷர் இவ்வுலகை விட்டுச் சென்ற பிறகு அவரைப் பின்பற்றுபவர்கள் அவர் கூறிய பாதையில் செல்லாமல் அவருடைய பிறப்பிடம், இறப்பிடம், மற்றும் அவர் வாழ்ந்த, சென்ற இடங்களையெல்லாம் வழிபடத் தொடங்கி விடுகிறார்கள். படிப்படியாக, அவர்கள் அந்த மகாபுருஷருடைய சிலைகளை உருவாக்கி பூஜைகளும் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஆரம்பத்தில், இவற்றையெல்லாம் அவருடைய நினைவாகவே செய்தாலும் கூடக் காலப்போக்கில் பிரமையில் விழுந்து விடுகின்றனர். மேலும், அந்த பிரமையே மெதுவாக, மூடப் பழக்க வழக்கம் என்னும் உருவத்தைப் பெற்று விடுகிறது. யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணரும் கூடத் தம்முடைய சமகாலத்தைச் சேர்ந்த சமுதாயத்தில் உண்மையின் பெயரால் செழித்து வளர்ந்திருந்த மூடப் பழக்கவழக்கங்கள் மற்றும் தவறான நெறிமுறைகளை எல்லாம் கண்டனம் செய்து மக்கள் அனைவரையும் சரியான பாதையில் நிலைநிறுத்துகிறார். இரண்டாவது அத்தியாயம் பதினாறாவது சுலோகத்தில் அவர், ''அர்ஜுனா! (அஸத்) உண்மையற்ற பொருளுக்கு நிலைத்தன்மை இல்லை. மேலும் (ஸத்) உண்மைக்கோ மூன்று காலங்களிலும் ஒரு குறைவும் இல்லை. பகவான் என்ற நிலையில் இருப்பதால் இதை நான் கூறவில்லை. மாறாக, அவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டினை தத்துவ தரிசிகளும் கண்டுள்ளனர். மேலும், அதையேதான் நானும் கூறப் போகிறேன்'' என்கிறார். பதின்மூன்றாவது அத்தியாயத்தில் அவர் க்ஷேத்திரம்– க்ஷேத்திரக்ஞர் ஆகியவற்றைப் பற்றி வர்ணிக்கும்போது, இது, ''**ருஷிபிர் பஹுதா கீதம்**''– ''ரிஷிகளால் பலமுறை பாடப்பட்டுவிட்ட ஒன்றையே மறுபடியும் கூறுவதாகக் சொல்கிறார். என்று சொல்லியே விளக்குகிறார். பதினெட்டாவது அத்தியாயத்தில் 'தியாகம்' மற்றும் 'சன்னியாசம்' ஆகியவற்றின் தத்துவத்தை எடுத்துரைக்கும் போதும் அவர் ஏற்கனவே வழக்கத்தில் இருந்த நான்கு விதமான கருத்துக்களைப் பற்றிக் கூறி, அவற்றிலிருந்து ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்து, தம்முடைய கொள்கையும் அதுவே என்று சொல்லிச் சான்றுரைக்கிறார் ; ஆதரிக்கிறார்.

**சன்னியாசம் :– (துறவறம்)**

ஸ்ரீகிருஷ்ணருடைய காலத்தில், அக்கினியைத் (நெருப்பைத்) தொடாதவர் மற்றும் ஆன்ம சிந்தனைச் செயல்களையும் கூடத் துறந்து விட்டுத் தன்னை, ''யோகி'', ''சன்னியாசி'' (துறவி) என்றெல்லாம் சொல்லிக் கொள்பவர்களுடைய மதப் பிரிவுகள் செழிப்புற்று ஓங்கி வளர்ந்து கொண்டு இருந்தன. அவர் அவற்றையெல்லாம் கண்டித்தவாறே, ''ஞானமார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய

இரண்டிலுமே அந்தந்த மார்க்கங்களுக்கு ஏற்பக் கர்மத்தை மட்டும் துறப்பதற்கு எந்தவொரு வழிவகையும் இல்லை. கர்மத்தை மட்டும் கண்டிப்பாகச் செய்துதான் ஆகவேண்டும். கர்மத்தைச் செய்து கொண்டே இருந்தால், எல்லாவிதமான சங்கல்பங்களும் அழிந்து விடுகின்ற அளவு ஆன்மீக சாதனையானது மிகவும் நுட்பமடைந்து விடுகின்றது. இதுவே முழுமையான சன்னியாசம் (துறவு) எனப்படுகிறது. இதற்கிடையில் "சன்னியாசம்" என்ற பெயரில் ஒரு பொருளும் கிடையாது. வெறுமனே ஆன்மீகக் கிரியையை (செயலினை) மட்டும் துறந்து விடுவதாலோ மற்றும் நெருப்பைத் தொடமாட்டேன் என்றெல்லாம் சொல்லிக் கொள்வதாலோ எல்லாம் எவனும் சன்னியாசியாக ஆகிவிடுவதில்லை, யோகியாக மாறிவிடுவதும் இல்லை", என்றார். (இதைப் பற்றி இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு மற்றும் சிறப்பான விளக்கங்களை உள்ளடக்கிய பதினெட்டாவது அத்தியாயங்களைப் பார்த்தால் புரியும்.)

**கர்மம் :-**

இதே போன்றுதான் கர்மத்தின் விஷயத்திலும் எத்தனையோ விதமான தவறான மற்றும் குழப்பம் நிறைந்த கொள்கைகள் உலகில் காணக் கிடைக்கின்றன. இரண்டாவது அத்தியாயத்தின் முப்பத்தி ஒன்பதாவது சுலோகத்தில் அவர், "அர்ஜூனா! இதுவரை இந்த புத்தியானது உனக்காக சாங்க்ய யோகத்தின் (ஞான யோகம்) விஷயத்தில் கூறப்பட்டது. அடுத்ததாக, இதையே நீ, இனி, (பற்றற்ற) நிஷ்காம கர்மயோகத்தின் விஷயத்தில் கேள். இதனுடன் இணைந்து நீ கர்மங்களின் பந்தங்களை எல்லாம் நல்லவிதமாக அழித்துவிட முடியும். இதைச் சிறிதளவு கடைப்பிடித்தாலும் கூட மாபெரும் பிறப்பு, இறப்பு என்னும் பயத்தில் இருந்து உன்னை மீட்க வல்லதாக அமையும். இந்த (பற்றற்ற) நிஷ்காம கர்ம யோகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள செயல்முறை ஒன்றுதான் ; புத்தியும் ஒன்றுதான் ; வழிமுறையும் கூட ஒன்றேதான். ஆனால், விவேகமற்றவர்களுடைய புத்தி எண்ணற்ற கிளைகளை உடையதாக இருக்கிறது. எனவேதான், அவர்கள் கர்மத்தின் பெயரால் எண்ணற்ற செயல்களை விரிவுபடுத்திக்கொண்டே செல்கின்றனர். அர்ஜூனா! நீ நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய். அதாவது, செயல்கள் என்ற பெயரில் எவ்வளவோ இருக்கலாம். ஆனால், அவைகள் எவையுமே கர்மம் அன்று. கர்மம் என்பது நிச்சயிக்கப்பட்டுள்ள ஒரே திசையில் செல்வது. கர்மம் என்பது பிறவி பிறவிகளாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் உடல்களின் யாத்திரையை முடிவிற்குக் கொண்டு வரும் வல்லமை உடையது. ஒரு வேளை, இன்னும் ஒரு பிறவி எடுக்க வேண்டும் என்றிருந்தால் பயணம் எங்கே முடிவிற்கு வந்து விட்டதாக அர்த்தமாகும்?" என்கிறார்.

**வேள்வி (யக்ஞம்) :–**

அந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம் என்பதுதான் என்ன? ஸ்ரீகிருஷ்ணர் அதைத் தெளிவுபடுத்துகிறார் : "**யக்ஞார்த்தாத் கர்மணோஅன்யத்ர லோகோஅயம் கர்ம பந்தன:–**

அர்ஜுனா! வேள்வியின் செயல் முறையே கர்மம் எனப்படுகிறது. இதை விடுத்து, இவ்வுலகில் செய்யப்படுகின்ற மற்ற பிற செயல்கள் அனைத்தும் இதே உலகில் பந்தத்தை ஏற்படுத்துபவை ஆகுமே ஒழிய, அவையெல்லாம் கர்மம் இல்லை. கர்மம் என்பது இந்த சம்சார பந்தத்தில் இருந்து விடுதலை பெற்றுத் தரவல்லது." அடுத்ததாக, எதனைச் செயல்முறைப் படுத்துவதன் மூலமாகக் கர்மம் நடைபெற்றதாக எடுத்துக் கொள்ளப்படுகிறதோ, அந்த வேள்வி என்றால் என்ன? நான்காவது அத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணர் பதின்மூன்று, பதினான்கு விதங்களில் அமைந்துள்ள இந்த வேள்வியைப் பற்றி முழுமையான விளக்கம் அளித்துள்ளார்—சுவாசத்தில், தியானத்தில், ஆன்ம சிந்தனை மற்றும் புலனடக்கம், மனக்கட்டுப்பாடு முதலானவற்றால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படுகின்ற அகச் செயல்முறையாகும் அது. ஸ்ரீகிருஷ்ணர் இவ்விடத்தில் சாதாரணமாக இவ்வுலகில் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு செய்யப்படுகின்ற வேள்விகளுக்கும் இந்த வேள்விக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது என்பதையும் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டார். 'உலகில் சாதாரணமாகக் கிடைக்கின்ற சில பொருட்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் வேள்விகளெல்லாம் மிகக் குறைவான பலனையே அளிக்கவல்லவை' என்கிறார் அவர். நீங்கள் வேண்டுமானால் கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி வேள்விகளைச் செய்து கொள்ளுங்கள்! கீதையில் கூறப்படுகின்ற, பல்வேறு வகைகளாக அமைந்துள்ள வேள்வியோ, மனம் மற்றும் புலன்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஆழ்மனச் செயல்கள் மூலமாக வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படுகிறது. வேள்வியானது முழுமை அடைந்த நிலையில் எதனைப் படைக்கிறதோ, அந்த அமிருதத் தத்துவத்தை (மரணமில்லாப் பெருவாழ்வு) அறிந்து கொள்வதே "ஞானம்" எனப்படுகிறது. அந்த "ஞானம்" என்னும் அமிருதத்தை அருந்துகின்ற யோகியே என்றும் நிலையான, மாறாத சனாதன பிரம்மத்திற்குள் நுழைவு பெறுகிறான். எதற்குள் நுழைவு பெற வேண்டுமோ, அதில் நுழைவும் பெற்றாகி விட்டது எனும்போது, அவனைப் பொறுத்தவரையில், அதற்கு மேலும் தொடர்ந்து கர்மம் செய்வதால் எந்தப் பயனும் இல்லை என்னும் நிலை வந்து விடுகிறது. எனவே, ஒட்டு மொத்தக் கர்மமும் இறைவனை நேரடியாக தரிசனம் செய்து (கண்கூடாக) அறிந்து கொள்வதாகிய ஞானத்திலேயே கலந்து மறைந்து விடுகின்றன. கர்மம் செய்துதான்

ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்து அவன் விடுதலை பெற்று விடுகிறான். இந்த முறையில், நிச்சயிக்கப்பட்டுள்ள வேள்விக்குச் செயல்முறை வடிவம் கொடுப்பதையே ''கர்மம்'' என்கிறோம். கர்மத்தின் தூய்மையான பொருள் ''இறை வழிபாடு'' என்பதாகும்.

இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம் (நியத கர்மம்), வேள்வியின் செயல்முறை எனப்படும் கர்மம் (யக்ஞார்த்த கர்மம்). அல்லது, ததர்த்த கர்மம் என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்ற அந்த ஒரே கர்மத்தைத் தவிர, கீதையில் வேறெந்த கர்மத்தைப் பற்றியும் கூறப்படவேயில்லை. இதையேதான் ஸ்ரீகிருஷ்ணர் வாய்ப்புக் கிடைத்த இடங்களில் எல்லாம் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆறாவது அத்தியாயத்தில் இதையேதான் ''**செய்யத் தகுந்த கர்மம், கார்யம் கர்மம்**'' என்றும் கூறுகிறார். பதினாறாவது அத்தியாயத்தில் அவர், ''காமம், கோபம் மற்றும் லோபம் (பேராசை) ஆகியவற்றைத் துறந்த பிறகுதான் மேலான நன்மையைப் பெற்றுத்தர வல்லது எனப்படுகின்ற அந்தக் கர்மத்தை ஆரம்பிக்கவே முடியும்'' என்றும் கூறினார். உலகியல் சார்ந்த கர்மங்களில் எவ்வளவுக்கு எவ்வளவு மூழ்கியுள்ளனரோ, அவர்களிடம் அவ்வளவுக்கவ்வளவு காமம், கோபம் மற்றும் லோபம் (பேராசை) ஆகிய விகாரங்கள்தானே நிரம்பிவழிகின்றன. இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்திற்கு மட்டுமே அவர் 'சாஸ்திர விதிமுறைக்குள் அடங்கிய கர்மம்', என்ற பெருமையைத் தந்துள்ளார். கீதை தன்னில் தானே முழுமையான, மற்றும் முதன்மையான சாஸ்திரமும் ஆகும். அனைத்திலும் தலைசிறந்த சாஸ்திரம் **வேதம்** எனப்படுகிறது. வேதங்களின் சாரமே உபநிஷதம் எனப்படுகிறது. மேலும், அவையனைத்தின் சாராம்சங்களே யோகேஷ்வரராகிய ஸ்ரீகிருஷ்ணருடைய தெய்வத் திருவாக்குகள் அடங்கிய கீதையாகும். பதினேழு, மற்றும், பதினெட்டாம் அத்தியாயங்களில்கூட, சாஸ்திரவிதிகளால் நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம், நியமிக்கப்பட்டுள்ள கர்மம், கடமை எனப்படும் கர்மம், மற்றும் புண்ணிய கர்மம் என்றெல்லாம் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டு அவர், ''இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம் ஒன்று மட்டுமே மேலான நன்மையை ஏற்படுத்த வல்லது'' என்பதை உறுதி செய்கிறார்.

யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர் இவ்வளவு தூரம் வலியுறுத்திக் கூறிய பிறகும்கூட, நீங்கள் அந்த நிச்சயிக்கப்பட்டுள்ள அதே கர்மத்தைச் செய்யாமல் இருப்பது மட்டுமல்லாது, ஸ்ரீகிருஷ்ணர் கூறுவதையும் ஏற்றுக் கொள்ளாமல், வேறு எதையெல்லாமோ கற்பனை செய்து கொண்டு இந்த உலகத்தில் செய்யப்படுகின்ற செயல்களை எல்லாம் கர்மம் என்றே ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எதையும் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பலனை மட்டும் விரும்பாமல் இருந்தால் போதும், அதுவே (பற்றற்ற) நிஷ்காம

கர்மம்! என்றும் கடமை உணர்வுடன் செய் அதுவே கடமை யோகம்! என்றும், எதை வேண்டுமானாலும் செய், ஆனால், நாராயணனிடம் சமர்ப்பணம் செய்— அதுவே, சமர்ப்பண யோகம்! என்றும், இதே முறையில், வேள்வி, என்ற பெயரைக் கேட்டவுடனே, நாம், பூத வேள்வி, பித்ரு வேள்வி, பஞ்ச வேள்வி, விஷ்ணுவை நிமித்தமாகக் கொண்டு செய்யும் வேள்வி என்றெல்லாம் பல்வேறு வகையான வேள்வி குண்டங்களை நிர்மாணித்து அந்தச் செயல்களில் எல்லாம் கலந்து கொண்டு "**ஸ்வாஹா**" சொல்வதற்காக உற்சாகமாகப் போய் வேறு நின்று கொள்கிறோம். ஒருவேளை, ஸ்ரீகிருஷ்ணர் இதையெல்லாம் தெளிவுபடுத்தவில்லை என்றால் நாம் எதையாவது செய்து கொண்டிருக்கலாம். ஆனால், அவரே, தெளிவாகச் சொல்லியிருக்கும்போது அவர் எதைச் சொன்னாரோ, அதை மட்டுமே கேட்டு நடக்க வேண்டும். ஆனால், நம்மால் அவ்வாறு நடக்க முடியவில்லை. தலைமுறை தலைமுறையாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகத் தவறாக கற்பிதம் செய்து கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்கள் மற்றும் மூடநம்பிக்கைகள், பல்வேறு விதமான, அர்த்தமே புரியாத பூஜைவிதிமுறைகள் எல்லாம் நமது மூளையில் நன்றாக, ஆழமாகப் பதிந்து கொண்டிருக்கின்றன. ஒருவேளை புறஉலகப் பொருட்கள் எதைவேண்டுமானாலும் விற்றுவிட்டு அப்பால் ஓடி விடலாம். ஆனால் வெகுகாலமாகவே நாம் சேகரித்து வைத்திருக்கின்ற இந்த மூடநம்பிக்கைகளோ நமது மூளையில் எப்போதும் பதிந்து கொண்டு, நம்மைக் காலங்காலமாக பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. எனவேதான் ஸ்ரீகிருஷ்ணருடைய வார்த்தைகளைக் கூட, அந்தத் தவறான கொள்கைகளுக்கு ஒத்துவருமாறு மாற்றியமைத்து கொண்ட பிறகுதான் ஏற்றுக்கொள்கிறோம். கீதை ஆழ்ந்து கற்கப்பட வேண்டிய சாஸ்திரம் ஆகும். அது எளிமையான சமஸ்க்ருத மொழியில் அமைந்துள்ளது. எனவே, நீங்கள் ஒவ்வொரு வார்த்தையையும் பிரித்துப் பொருள் கொண்டாலும் கூட, ஒருபோதும் சந்தேகம் ஏற்படுகின்ற வாய்ப்பேயில்லை. இந்த வகையான முயற்சிதான் இந்தப் புத்தகத்திலும் கையாளப்பட்டு உள்ளது.

**யுத்தம் :-**

ஒருவேளை "வேள்வி" மற்றும் "கர்மம்" ஆகிய இரண்டும் உள்ளது உள்ளபடியாக உங்களுக்குப் புரிந்து விட்டால் யுத்தம், வர்ண அமைப்பு, வர்ணக் கலப்பு, ஞான யோகம், கர்ம யோகம் மற்றும் ஒட்டு மொத்தக் கீதையின் சுருக்கம் எல்லாம் ஓரளவுக்குப் புரிந்துவிடும். அர்ஜுனன் யுத்தம் செய்ய விரும்பாதிருந்தான். அவன், வில்லை எறிந்து விட்டு இரதத்தின் பின்பாகத்தில் பேசாமல் உட்கார்ந்து விட்டான். ஆனால், யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், கர்மத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லிக் கொடுத்து, கர்மத்தை வெறுமனே வலியுறுத்துவதுடன் மட்டும் நின்று விடாமல் அவனை அந்தக் கர்மப் பாதையில்

வழிநடத்தியும் சென்று வெற்றி தேடித் தந்தார். யுத்தம் நடந்தது. அதில் சந்தேகம் இல்லை. கீதையில் பதினைந்து, இருபது சுலோகங்களில் அவர் திரும்பத் திரும்ப, "அர்ஜுனா! நீ யுத்தம் செய்!" என்று சொல்வதாகவே அமைந்துள்ளன. ஆனால், ஒரு சுலோகம் கூடப் புறஉலகில் நடைபெறுகின்ற வெட்டு, குத்து, கொலை ஆகியவற்றை ஆதரிப்பது போல் அமைந்திருக்கவில்லை. (உதாரணத்திற்கு ஒரு சில : அத்தியாயம் 2, 3, 11, 15 மற்றும் 18) ஏனெனில், அவர் எந்தக் கர்மத்தை வலியுறுத்திக் கூறுகிறாரோ, அந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம், ஏகாந்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து வாழ்வதாலும், சித்தத்தை எல்லாப் பக்கங்களில் இருந்தும் விடுவித்துக் கொண்டு தியானத்தில் ஈடுபடுவதாலும் நிறைவேற்றப்படுகின்ற ஒன்றாகும். எப்பொழுது கர்மம் என்பதற்கு இதுவே உண்மையான விளக்கம் என்றாகி விட்டதோ, சித்தமானது ஏகாந்தம் மற்றும் தியானத்தில் ஈடுபட்டிருக்கிறதோ, அங்கே "யுத்தம்" எவ்வாறு நிகழும்? ஒருவேளை கீதையில் கூறப்பட்டுள்ள மேலான, உயர்வான நன்மை யுத்தம் செய்பவர்களுக்கானது மட்டுமே என்றால் நீங்கள் கீதையைப் பின்தொடரவே வேண்டியதில்லை. ஏனெனில், உங்கள் முன்னால், அர்ஜுனனுக்கு வாய்த்ததைப் போன்று யுத்தம் நடைபெறப் போவதற்கான ஆயத்தங்களோ, ஏற்பாடுகளோ எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லையே? சரியாகச் சொல்வதென்றால் அன்று இந்த யுத்தம் நடைபெறப் போவதற்கான நிலவரம் எப்படி இருந்ததோ இன்றும் அதே நிலைதான் இருக்கிறது. எப்பொழுது நீங்கள் சித்தத்தை எல்லாப் பக்கங்களில் இருந்தும் விடுவித்துக் கொண்டு, இதயதேசத்தில் தியானம் செய்ய முயல்கிறீர்களோ, அப்பொழுதே காமம், கோபம், விருப்பம், வெறுப்பு, ஆணவம் முதலான விகாரங்கள் உங்கள் முன்பு தடையாக வந்து நின்று கொண்டு, சித்தத்தை ஒருமுகப்படுத்த விடாமல், தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடும். அந்த விகாரங்களுடன் மோதி, அவற்றை வென்று, முழுமையாக அவற்றை அழிப்பதையே "யுத்தம்" என்கிறோம். இந்த உலகத்தில் என்னவோ போர்கள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால், அவற்றால் மேலான நன்மை ஒன்றும் உண்டாவது இல்லை. ஆனால், அதற்கு மாறாகப் பேரழிவே ஏற்படுகிறது. அந்தப் பேரழிவிற்குப் பிறகு நிலவும் ஒருவிதமான இறுக்கமான நிலவரத்தை அமைதி என்று அழைப்பதா? அல்லது இறுக்கமான சூழ்நிலை என்று அழைப்பதா? இதைத் தவிர, வேறெந்த வகையான அமைதியும் இந்த உலகில் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. எப்பொழுது, இந்த ஆன்மாவானது தன்னுடைய, என்றென்றும் நிலையான, மாறாத, பரமாத்ம, ஆன்ம வடிவத்தை அடைந்து விடுகிறதோ, அப்பொழுதுதான் அந்த அமைதி கிடைக்கிறது. அது ஒன்று மட்டுமே மேலான அமைதி எனப்படுகிறது. ஏனெனில், அதற்குப் பின்னால் அமைதியற்ற நிலை என்ற ஒன்று இருப்பதில்லை, ஆனால், அந்த அமைதியைப்

பெறுவது ஆன்ம சாதனையின் மூலமாக மட்டுமே முடியும். அதற்காக, நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்வது ஒன்றே வழியாகும்.

**வர்ணம் :– (வகுப்பு)**

அந்தக் கர்மம்தான் நான்கு வர்ண அமைப்புகளாக பிரித்து ஒழுங்குமுறைப்படுத்தப் பட்டுள்ளது. எல்லோரும்தான் ஆன்ம சிந்தனையில் ஈடுபடுகிறார்கள். ஆனால், ஒரு சிலரே, உள்மூச்சு, வெளி மூச்சு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறுகிறார்கள். மற்றவர்களோ, ஆரம்ப நிலையில் இரண்டு மணிநேரம் உட்கார்ந்தாலும்கூட பத்து நிமிடம் கூட அவர்களால் தாங்கள் நினைத்தபடி, மனத்தை ஒருமுகப்படுத்த முடிவதில்லை. அத்தகைய குறைந்த அளவு சாதனை அறிவுடைய சாதகர் சூத்திர சாதனைப் பிரிவைச் சேர்ந்தவர் ஆவார். அவர் தன்னுடைய சுபாவத்தில் இருந்து தோன்றிய கர்மத் திறனுக்கு ஏற்ப, சேவை புரிவதில் இருந்தே தன்னுடைய கர்மத்தைத் தொடங்க வேண்டும். படிப்படியாக, வைசியர், சத்திரியர், மற்றும் பிராம்மணப் பிரிவுகளில் அடையப்படுகின்ற உயர் கர்மத் திறன் அவருடைய சுபாவத்தில் பெருகிக் கொண்டே செல்லும். அவர் தனது பாதையில் உயர்ந்து கொண்டே செல்வார். மிகவும் உயர்வானது என்று கருதப்படுகின்ற பிராம்மண சாதனைப் பிரிவும்கூடத் தன்னில் குறைவுடையதுதான். ஏனெனில், இந்த நிலையிலும்கூட அந்த பிரம்மம் என்னவோ இன்னும் அடையப்படாத நிலையில் தனித்தே இருக்கிறது. பிரம்மத்தில் நுழைவு பெற்றுவிட்டால், அந்த பிராம்மணப்பிரிவு என்பதும்கூட இல்லாமல் போய்விடுகிறது. ‘‘வர்ணம்’’ என்றால் ‘‘தோற்றம்’’ என்று பொருள். இந்த உடல் உங்களுடைய உண்மையான தோற்றம் அல்ல. உங்களுடைய அக எண்ணவோட்டம் எதுவோ, அதுவே உங்களுடைய உண்மையான தோற்றம் ஆகும். ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார் : ‘‘அர்ஜுனா! மனிதன் நம்பிக்கைமயமானவன். எனவேதான் அவனுக்கு எதிலாவது நம்பிக்கை அவசியம் இருக்கவே செய்கிறது. அவனுடைய நம்பிக்கை எவ்விதமோ, அவ்விதமே அவனும் இருக்கிறான். எண்ணம் எவ்வாறோ, அவ்வாறே மனிதன்”. ‘‘வர்ணம்’’ என்பது கர்மத் திறனை மதிப்பிடுகின்ற அகஅளவியல் குறியீடு ஆகும். ஆனால், மக்கள் அனைவரும் இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்தை விட்டுவிட்டு, வெளியில் உள்ள சமுதாயத்தில் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு, சாதிகளை உருவாக்கிக் கொண்டு, அவற்றையே ‘வர்ண அமைப்பு’ அல்லது ‘சாதி அமைப்பு’ என்று ஏற்றுக் கொள்வதுடன் நிற்காமல் அவற்றிற்கான சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் என்று எதை எல்லாமோ உண்டாக்கிக் கொண்டுள்ளனர். அவை அனைத்தும் வெறும் சமுதாய அமைப்புகளே தவிர, வேறொன்றுமில்லை. அவர்கள் கர்மத்தின் உள்ளது உள்ளபடியான யதார்த்த உருவத்தைத் தங்கள்

இஷ்டப்படியெல்லாம் வளைத்தும் முறுக்கியும் மாற்றி மாற்றி அமைத்தும் கொள்கின்றனர். அதன்மூலம், அவர்களுக்குக் கிடைக்கின்ற போலித்தனமான சமுதாய மரியாதை மற்றும் சலுகைகளுக்கு எந்தத் தடங்கலும் ஏற்படாமல் தற்காத்துக் கொள்கின்றனர். காலப்போக்கில் வர்ணத்தை நிச்சயம் செய்வது பிறப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்துவிட்டது. ஆனால், உண்மையில், அப்படி எல்லாம் ஒன்றுமே கிடையாது. ஸ்ரீகிருஷ்ணர், ''நான்கு வர்ணங்களையும் நானே உருவாக்கினேன்'' என்கிறார். அப்படியென்றால் இந்த பாரத தேசத்திற்கு வெளியில் படைப்பு என்ற பெயரில் ஒன்றுமே இல்லையா என்ன? ஆனால், அங்கெல்லாம் இந்த தேசத்தில் காணப்படுவதைப் போன்று, ''சாதிகள்'' என்ற பெயரில் எந்த அமைப்புமுறையும் இல்லையே ஏன்? இந்த பாரத தேசத்தில் மட்டும் இலட்சக்கணக்கான சாதிகள், மற்றும், அதற்குள் அடங்கிய கிளை சாதிகள் என்றொரு நிலை இருக்கிறதே! ஸ்ரீகிருஷ்ணர் சாதியின் பெயரால் மனிதர்களை எல்லாம் பிரித்தாளும் வேலையில் ஈடுபட்டிருந்தாரா? ''இல்லை, இல்லவே இல்லை''. ''**குணகர்ம விபாகச**'' :– குணத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்தையே நான்கு சாதனைப் பிரிவுகளில் ஒழுங்குமுறைப்படுத்தியுள்ளேன்'' என்கிறார் அவர். ''**கர்மாணி ப்ரவி பக்தானி**''– ''கர்மமே பிரிக்கப்பட்டு உள்ளது,'' ''கர்மம் என்றால் என்ன?'' என்பது புரிந்து விட்டால், ''வர்ணம் என்றால் என்ன?'' என்பதும் புரிந்து விடும். ''வர்ணம்'' புரிந்து விட்டால், ''வர்ணக் கலப்பு'' என்பதையும் உள்ளது உள்ளவாறே புரிந்து கொண்டு விடுவீர்கள்.

**வர்ணக் கலப்பு (வகுப்பு கலப்பு) :–**

இந்தக் கர்மப்பாதையில் இருந்து வழிதவறிப் போவதுதான் வர்ணக் கலப்பு எனப்படுகிறது. ஆன்மாவின் தூய்மையான வர்ணம் பரமாத்மா ஆகும். அதற்குள் நுழைவு பெற்றுத் தருகின்ற கர்மத்தில் இருந்து விலகிச் சென்று இயற்கை அல்லது படைப்புடன் கலப்படமாகி விடுவதையே வர்ணக் கலப்பு என்கிறோம். ஸ்ரீகிருஷ்ணர், ''இந்த கர்மத்தைச் செய்யாமல் எவரும் அந்த ஆன்ம வடிவத்தை அடையவே முடியாது. அதே சமயம், இறைவனை நேரடியாக தரிசனம் செய்து முக்தி நிலையைப் பெற்று விட்ட, மகாபுருஷரைப் பொறுத்தவரையில், இந்த கர்மத்தைச் செய்வதால் எந்தவொரு இலாபமும் இல்லை, மற்றும், இந்தக் கர்மத்தைச் செய்யாமல் விட்டு விடுவதால் எந்தவொரு நஷ்டமும் இல்லை. அப்படி இருந்தும்கூட, பின்வரும் சமுதாயத்தினரை நல்வழியில் செலுத்தவும் உலக ஒற்றுமைக்காகவும் அவர்கள் தொடர்ந்து ''கர்மத்தில் ஈடுபடுதல்'' என்ற விரதத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். ''ஒருவேளை நான் மட்டும் கவனத்துடன் இந்தக் கர்மத்தைக் கடைப்பிடிக்கவில்லையென்றால்

எல்லோரும் வர்ணக் கலப்பை அடைந்து விடுவார்கள்''.—அந்த மகாபுருஷரை அப்படியே பின்பற்றி, அவரைப் போன்றே தாங்களும் இறை ஆராதனையை நிறுத்தி விடுவதுடன் இயற்கை அல்லது படைப்பிலிருந்து வழிதவறிப் போய்விடுவார்கள் ; வர்ணக் கலப்பிற்கு ஆளாகிவிடுவார்கள்; ஏனெனில், இந்தக் கர்மத்தைச் செய்துதான் அந்த மேலான, 'பரம நைஷ்கர்ம்ய ஸித்தி' என்ற நிலையையும், தங்களுடைய உண்மையான, தூய்மையான வர்ணமாகிய பரமாத்மாவையும் அவர்களால் அடைய முடியும்.

**ஞானயோகம் மற்றும் கர்ம யோகம் :–**

கர்மம் ஒன்றேதான். அதுவே, நியமிக்கப்பட்டுள்ள கர்மம், இறை ஆராதனை எனப்படும். ஆனால், அதைச் செய்கின்ற கண்ணோட்டங்கள் இரண்டு விதமானவை. தன்னுடைய சொந்த பலத்தை அறிந்து கொண்டு, இலாபநஷ்டத்தை நன்றாகக் கணக்குப் போட்டுக் கொண்டு இந்தக் கர்மத்தைச் செய்வதே ''ஞான யோகம்'' எனப்படுகிறது. இந்த மார்க்கத்தில் சாதகன், ''இன்று எனது நிலை இது. அடுத்ததாக, இந்தச் சாதனைநிலையைச் சென்றடைவேன். அதற்குப் பிறகு என்னுடைய ஆன்ம வடிவத்தை அடைவேன்'' என்பதையெல்லாம் அறிந்தவனாக, இத்தகைய ஊக்கமளிக்கும் உணர்வுகளைத் துணையாகக் கொண்டு கர்மத்தில் முன்னேறிச் செல்கிறான். தனது நிலையைப் பற்றிய ஞானத்தின் துணையுடன் செல்கிறான். எனவேதான் ''ஞான யோகி'' என்றழைக்கப்படுகிறான். சமர்ப்பண உணர்வுடன் இதே கர்மத்தில் ஈடுபட்டபடியே, இலாபம்—நஷ்டம் ஆகியவற்றைப் பற்றிய முடிவுகளையெல்லாம் இஷ்ட தெய்வமாகிய ஸத்குருவின் மீதே போட்டு விட்டுச் செல்பவன் ''நிஷ்காம கர்ம யோகி'' அல்லது, ''பக்தி யோகி'' எனப்படுகிறான். இரண்டு மார்க்கங்களிலுமே வழி காட்டியாக இருப்பவர் என்னவோ ஸத்குருதான். ஒருவன் ஒரு மகாபுருஷரிடம் கற்றுக் கொண்டு தன்னிஷ்டப்படி இதே கர்மத்தில் ஈடுபடுகிறான். மற்றொருவனோ அதே மகாபுருஷரிடம் கற்றுக் கொள்வதுடன் மட்டுமின்றி, அவரையே முழுவதுமாக சார்ந்து நின்று கொண்டு அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப இந்தக் கர்மத்தில் ஈடுபடுகிறான். இரண்டு மார்க்கங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு இதுமட்டும்தான். எனவேதான் யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், ''அர்ஜுனா! ஸாங்க்ய யோகத்தின் மூலம் எந்த மேலான உண்மை கிடைக்கிறதோ, அதேதான் (பற்றற்ற) நிஷ்காம கர்ம யோகத்திலும் கிடைக்கிறது. எனவே எவன் இரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறானோ, அவனே உள்ளதை உள்ளபடிக்குப் பார்க்கிறான். இருவருக்கும் ஆன்மீகக் கிரியையைப் பற்றிய அறிவைக் கற்றுக் கொடுப்பது என்னவோ தத்துவதரிசியாகிய ஒரே மஹாபுருஷர்தான். அந்தச் செயல்பாடும் கூட ஒன்றேதான். அதுவே இறை ஆராதனை எனப்படுவது. இருவருமே

ஆசைகளைத் தியாகம் செய்கிறார்கள், மற்றும், இரண்டு மார்க்கங்களின் விளைவும் ஒன்றுதான். அந்தக் கர்மத்தைச் செய்வதில் உள்ள கண்ணோட்டங்களே இரண்டு வகைகளாகும்" என்று கூறுகிறார்.

**பரமாத்மா ஒருவரே! :-**

நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம் என்பது மனம் மற்றும் புலன்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்ற, நிர்ணயிக்கப்பட்ட அகச் செயல்முறையாகும். இதுவே கர்மத்தின் உண்மையான வடிவம் என்றாகி விட்டபிறகு, வெளியில், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவற்றை எல்லாம் உருவாக்கிக் கொண்டு, தேவ, தேவியர்கள் என்றெல்லாம் கற்பனையால் உருவாக்கப்பட்ட பல்வேறு சிலைகளை வடிவமைத்துக் கொண்டு அத்தகைய சிலைகளையோ அல்லது மதச் சின்னங்களையோ வழிபடுவது எந்தவகையில் பொருத்தமானது ஆகும்.? இந்தியாவில் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சமுதாயத்தினர் (அவர்கள் எல்லாம் உண்மையில் சொல்லப்போனால், என்றும் நிலையாக உள்ள, மாறாத தர்மத்தைப் (சனாதன தர்மம்) பின்பற்றுபவர்கள்தாம். அவர்களுடைய பண்டைய தலைமுறையைச் சேர்ந்த பழம்பெரும் முனிவர் பெருமக்கள் மேலான சத்தியமாகிய (உண்மை) பரமாத்மாவை அடைந்தது மட்டுமின்றி, உள்நாடு, வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று உலகம் முழுவதும் அந்தப் பரமாத்மாவின் இறைச் செய்திகளைப் பரப்புகின்ற ஆன்மீகப் பணியில் ஈடுபட்டிருந்தனர். எனவே, அந்தப் பாதையைப் பின்பற்றிச்செல்பவர்கள் இந்த உலகத்தில் எங்கிருந்தாலும் சரி, சனாதன தர்மிகள் என்று அழைக்கப்படுகின்ற தகுதியை உடையவர்கள்தான். அத்தகைய கௌரவம் வாய்ந்த இந்துப் பெருமக்கள்) ஆசைகளால் அழுத்தப்பட்டுப் பல்வேறு வகையான மன மயக்கங்களுக்கு ஆளாகி விட்டனர். ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். "அர்ஜுனா! தேவதைகளின் இடத்தில் தேவதை என்ற பெயரில் ஒரு சக்தியும் இல்லவே இல்லை. எங்கெல்லாம் மனிதர்களின் நம்பிக்கை வளைந்து கிடக்கிறதோ, அங்கெல்லாம் பின்புலமாக இருந்து கொண்டு நானே அவர்களுக்குப் பலன்களை அளிக்கிறேன். அவர்களின் நம்பிக்கையை வளர்த்து விடுகிறேன். ஏனெனில், நான் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவன் ஆவேன். ஆனால், அவர்களுடைய அந்த இறைவழிபாடு விதிமுறைகளுக்குப் புறம்பானது ஆகும். மேலும், அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்தப் பலன்களும்கூட அழியக் கூடியவைதான். எவர்களுடைய மெய்யறிவு ஆசைகளால் அபகரிக்கப்பட்டுவிட்டதோ, அந்த மூட அறிவுடையவர்களே மற்றபிற தெய்வங்களை எல்லாம் வழிபடுகிறார்கள். ஸாத்வீகமான மனிதர்கள் 'தெய்வங்களை' வழிபடுகின்றனர். ராஜஸீகமான மனிதர்கள் யட்சர்களையும் ராட்சதர்களையும் வழிபடுகின்றனர். தாமஸீகமானவர்கள் பூதங்களையும்

இறந்தவர்களையும் வழிபடுகின்றனர். கடுமையான தவங்களையும் மேற்கொள்கின்றனர். ஆனால், அர்ஜுனா! அவர்கள் உடலில் நிலைத்துள்ள பூத சமுதாயத்தையும் மற்றும் ஆழ்மனத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவாகிய என்னையும் துன்புறுத்துகிறார்களே ஒழிய, என்னை வழிபடுவது இல்லை. அவர்களை எல்லாம் நிச்சயமாகவே நீ அசுர சுபாவத்துடன் கூடியவர்கள் என்றே அறிந்து கொள்". இதைவிடவும் அதிகமாக ஸ்ரீகிருஷ்ணர் என்ன சொல்லி விடப் போகிறார்? அவர் மிகவும் தெளிவாக, "அர்ஜுனா! இறைவன், மனிதர் உட்பட எல்லா உயிரினங்களின் இதயத்திலும் வசிக்கிறார். நீ அவருடைய சரணத்திற்கு மட்டுமே செல்" என்கிறார். இறைவனை வழிபடும் இடம் இதய தேசமே ஆகும். வெளியில் எங்கும் அல்ல, அதற்குப் பிறகும்கூட, மக்கள் கல்லையும், நீரையும், கோயில் குளங்களையும், மசூதிகளையும், தெய்வங்களையும் தேடியலைந்து கொண்டேதான் இருக்கின்றனர். இவைகளுடன் எல்லாம் சேர்த்து ஸ்ரீகிருஷ்ணருக்கும்கூட மாபெரும் சிலைகளை வடிவமைத்து ஆங்காங்கே நிறுவியிருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணருடைய சாதனைப் பாதையையே வலியுறுத்தியவரும் வாழும் நாள்வரை கற்சிலை உருவ வழிபாடுகளை எல்லாம் கண்டனம் செய்தவருமாகிய மஹாத்மா புத்தருக்கும் கூட அவரைப் பின்பற்றுவோர் மாபெரும் சிலைகளை வடிவமைத்து தீபாராதனைகளுடன் பல்வேறுவிதமான பூஜைகளைச் செய்யத் தொடங்கிவிட்டனர். ஆனால், அந்த புத்தரோ, "ஆனந்தா! ததாகதருடைய சரீரத்திற்குப் பூஜை செய்து கொண்டு நேரத்தை வீணாக்காதே!" என்று கூறியுள்ளார்.

கோயில், மசூதி, தேவாலயம், புண்ணிய ஸ்தலங்கள், புனித நதிகள், சிலைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை எல்லாமே பழங்காலத்தில் இருந்தே உருவாகி வந்துள்ள மகாபுருஷர்களின் ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவ்விடங்களில் எல்லாம் அவர்களால் அடையப்பட்ட பரமபிதா பரமாத்மாவைப் பற்றியும் அவரை அடைவதற்காக அவர்கள் மேற்கொண்ட சாதனையைப் பற்றிய நினைவலைகள் இருந்து கொண்டே இருக்கட்டும் என்று உயர்வான நோக்கங்களுடன்தான் இவையெல்லாம் உண்டாக்கப்பட்டன. மகாபுருஷர்களில் ஆண்களும், பெண்களும் என்று இருபாலருமே இருந்திருக்கின்றனர். ஜனகருடைய பெண் 'சீதை' முந்தைய பிறவியில் ஒரு பிராம்மணப் பெண்ணாக இருந்திருக்கிறார். தன்னுடைய தந்தையிடம் இருந்து கிடைத்த உற்சாகத்தாலும், தூண்டுணர்த்தலாலும் மேலான அந்த பிரம்மத்தை அடைவதற்காக அவர் தவம் மேற்கொண்டார். ஆனால், அதில் அவரால் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. அடுத்த பிறவியிலேயே அவர் அந்த ஸ்ரீராமரை அடைந்தார். மேலும், அனைத்தும் அறிந்து, அழிவற்ற, ஆதி சக்தியின் வடிவத்தில் நிலைபெற்றாள். சரி, இதேபோன்றுதான், இராஜ குலத்தில் பிறந்த

மீராவும் பரமாத்மாவின் பக்திக்காக அனைத்தையும் துறந்து விட்டு வெளியேறினார். அவர் எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு பரமாத்மாவின் சிந்தனையில் மூழ்கி விட்டார்; இடர்ப்பாடுகளை எல்லாம் தாங்கினார்; வெற்றியும் பெற்றார். அவருடைய ஞாபகங்களை நினைவூட்டும் வகையில் கோயில்கள் உருவாக்கப்பட்டன; நினைவு மண்டபங்கள் கட்டப்பட்டன. அவற்றின் நோக்கம் என்னவோ, சமுதாயம் அவருடைய உபதேசங்களைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதற்காகவே இருந்தன. மீராவாகட்டும், சீதாவாகட்டும் இந்த ஆன்மீக வாழ்வில் ஈடுபட்ட ஒவ்வொரு மஹாபுருஷரும் நம்முடைய இலட்சிய புருஷர்கள்தான். நாமெல்லோரும் அவர்கள் சென்ற பாதையில்தான் பயணம் செய்ய வேண்டும். ஆனால், ஒருவேளை நாமெல்லாம் அவர்களுடைய சரணங்களில் பூக்களைத் தூவி, சந்தனமிட்டு வணங்குவதால் மட்டுமே நமது கடமை தீர்ந்து போய்விட்டது என்று உட்கார்ந்து கொண்டால், அதை விடப் பெரிய மறதி வேறு என்னவாக இருக்க முடியும்?

பெரும்பாலோர் தங்களுடைய இலட்சிய புருஷர்களாக எவரை எண்ணுகிறார்களோ, அவர்களுடைய சிலை, சித்திரம், பாதச் சுவடுகள் ஆகியவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு பூஜை செய்வது, அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் செல்வது, மற்றும், அவர்கள் தொடர்பான எதையேனும் பார்ப்பது, கேட்பது ஆகிவற்றால் மனத்தில் நம்பிக்கை, ஆர்வம் பொங்குகிறது என்று நினைக்கிறார்கள். இது எல்லாம் சரிதான்! நாங்களும் கூட எங்களுடைய குருதேவ பகவானுடைய சித்திரத்தைக் குப்பையில் தூக்கி எறியமாட்டோம்தான், ஏனெனில், அவரன்றோ எங்களுடைய இலட்சிய புருஷர். அவர் தந்த உற்சாகம் தூண்டுணர்ச்சி மற்றும் அவரால் சுட்டிக் காட்டப்பட்ட பாதையில்தான் நாங்களும் போக வேண்டும். அவருடைய உண்மையான வடிவம் எதுவோ, சாதனையின் மூலம் படிப்படியாகச் சென்று அதனை அடைவதுதான் எங்கள் அனைவருடைய இலட்சியம் ஆகும். இதுவே, நாம் அவருக்குச் செய்கின்ற உண்மையான பூஜையும் ஆகும். எவர் உண்மையில் இலட்சிய புருஷரோ அவருக்கு எந்த அவமரியாதையும் செய்யக்கூடாது என்பதுவரை சரிதான். ஆனால், அவருக்கு இலைகளையும் பூக்களையும் அர்ப்பணித்து விட்டு, அதையே ‘பக்தி’ என்று எண்ணிக்கொண்டு உட்கார்ந்து விட்டால், இதை மட்டுமே மேலான நன்மையைப் பெற்றுத் தரவல்ல சாதனை என்று நினைத்து நின்று விட்டால், நாமெல்லாம் இலட்சியத்தை அடையாமல் வேறு எங்கோ விலகிச் சென்று வழிதவறிப் போய்விடுவோம், அவ்வளவுதான்.

ஒவ்வொருவருமே தங்களுடைய இலட்சிய புருஷரின் உபதேசங்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன் அவற்றையெல்லாம் பின்பற்றிச் செல்வதற்கு

உற்சாகமும் தூண்டுணர்வும் பெறுவதற்காகவே இந்த ஞாபகார்த்தச் சின்னங்களும் நினைவு மண்டபங்களும் உபயோகப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் ஆசிரமம், கோயில், மசூதி, தேவாலயம், மடம், விஹாரம், குருத்வார் அல்லது வேறு எப்படி வேண்டுமானாலும் பெயர் சூட்டிக் கொள்ளுங்கள். அத்தகைய இயக்கங்களுக்குத் தர்மத்துடன் தொடர்புள்ளது என்றிருந்தால், அது மட்டுமே போதுமானது. எவருடைய சிலை நிறுவப்பட்டு உள்ளதோ, அவர் என்ன செய்தார்? எதை அடைந்தார்? எவ்வாறு தவம் செய்தார்? எவ்வாறு இறைவனை அடைந்தார்? இவற்றை மட்டும் கற்றுக் கொள்ளும் நோக்கத்துடன்தான் நாமெல்லோரும் அங்கே செல்கிறோம். கண்டிப்பாக, அதற்காகப் போகவும் வேண்டும்தான். ஆனால், ஒருவேளை, இத்தகைய இடங்களில் அந்த மகாபுருஷர்கள் ஆன்மீகப் பாதையில் எவ்வாறு நடைபோட்டனர்? அவர்கள் செய்த சாதனைமுறை என்ன? என்பதெல்லாம் விளக்கப்படவில்லை என்றாலோ, மேலான நன்மையைப் பெற்றுத் தரவல்ல எந்த வழியும் காட்டப்படவில்லை என்றாலோ, அத்தகைய இடங்கள் அனைத்தும் தவறானவை ஆகிறது. அங்கெல்லாம் உங்களுக்கு ஏதேனும் ஒரு மூடப் பழக்க வழக்கம் மட்டுமே கிடைக்கும். அதுபோன்ற இடங்களுக்குச் சென்றால் உங்களுக்குத் துன்பமே விளையும். தனிநபர் மூலமாக வீடுவீடாகவும், ஒவ்வொரு தெருவிற்கும் சென்று உபதேசங்களை அளிப்பதற்குப் பதிலாக சமுதாய உபதேச இயக்கங்களின் வடிவில் இந்த ஆன்மீக உபதேச நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், காலப்போக்கில் இந்த ஆன்மீகத் தூண்டுணர்வு தரப்படவேண்டிய இடங்களில் எல்லாம் சிலைவழிபாடு, பூஜை முறைகள், மற்றும், எண்ணற்ற மூடப் பழக்க வழக்கங்கள் தர்மத்தின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டன. இங்கிருந்துதான் பிரமையின் கை ஓங்கத் தொடங்கிவிட்டது.

**நூல்கள்:–**

இந்தமுறையில், புத்தகங்களை ஆழ்ந்து கற்பதும் அவசியமாகும். அதன்மூலம், நீங்கள் நிச்சயிக்கப்பட்டுள்ள ஆன்மீகக் கிரியை என்றால் என்ன? எதனை யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர் நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மம் என்று கூறுகிறார்? என்பதை எல்லாம் புரிந்து கொள்ள முடியும். மேலும், எப்பொழுது அவையெல்லாம் புரியத் தொடங்கி விட்டதோ, அப்பொழுதே நீங்கள் அவற்றை நடைமுறையில் கடைப்பிடிக்க ஆரம்பித்து விடுவீர்கள். ஒருவேளை, மறந்து போய்விட்டால், மறுபடியும் அவற்றைப் படித்துக் கொள்ள வேண்டும். அதை விடுத்து, புத்தகத்தைப் பூஜையறைக்குள் வைத்துக் கொண்டு, அதற்கு அட்சதையும் சந்தனமும் பூசி, அதற்கு முன்னால் கைகளைக் கட்டித் தொழுது கொண்டு இருக்கக் கூடாது. புத்தகம் என்பது ஆன்மீகப் பாதையில் ஒரு

திசைகாட்டும் கருவியாகும். அது, சாதனை நிறைவடையும் காலம் வரை நமக்குத் துணை செய்கிறது. அதனைப் பார்த்துக் கொண்டே, மேன்மேலும் முன்னேறிச் சென்று, நம்முடைய இலட்சியத்தை அடைய வேண்டும். எப்பொழுது இஷ்ட தெய்வமாகிய ஸத்குருவை இதயத்தால் இறுகப் பிடிக்கின்ற திறன் வந்து விட்டதோ, அப்பொழுது அவரே ஒரு புத்தகமாக இருந்து நமக்கு எல்லாவற்றையும் விளங்க வைத்து விடுவார். எனவே, ஞாபகார்த்தச் சின்னங்கள், நினைவிடங்கள் எல்லாம் துன்பம் விளைவிப்பன அல்ல. ஆனால், இந்த ஞாபகச் சின்னங்களையும் சிலைகளையும் வழிபடுவதுடன் நாம் திருப்தியடைந்து விட்டால், அதுவே மிகப் பெரிய இழப்பாகும்.

**தர்மம்:–**

(அத்தியாயம் 2/ 16–29) யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில், “உண்மையற்ற (அஸத்) பொருளுக்கு நிலைத்தன்மை கிடையாது. மேலும், உண்மைக்கோ (ஸத்) ஒருபோதும் குறைவொன்றுமில்லை. பரமாத்மாவே உண்மை, அவரே என்றும் நிலைத்திருப்பவர், பிறப்பற்றவர், இறப்பற்றவர், மாற்றம் என்பதே இல்லாதவர். அவர் என்றும் மாறாமல் இருப்பவர். ஆனால், அவர் சிந்தனைக்கெல்லாம் அப்பாற்ப்பட்டவர், மற்றும், வரையறைக்கெல்லாம் அப்பாற்ப்பட்டவர். அவர் சித்தத்தில் எழுகின்ற எண்ண அலைகளுக்கெல்லாம் அப்பாற்ப்பட்டவராக வெகு தொலைவில் இருப்பவர் ஆவார்”. இனி, அடுத்ததாக, ‘இந்த சித்தத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது? அந்த சித்தத்தைக் கட்டுப்படுத்தி, அழித்து, அந்த பரமாத்மாவை அடைவதற்கான சிறப்பு விதிமுறைக்குப் பெயரே ‘கர்மம்’ எனப்படுகிறது. இந்தக் கர்மத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதையே ‘தர்மம்’ என்கிறோம். அதுவே நமது பொறுப்புடைமையும் ஆகும்.

கீதையில் (அத்தியாயம் 2/40) ஸ்ரீகிருஷ்ணர், “அர்ஜுனா! இந்தக் கர்ம யோகத்தில் ஆரம்பத்திற்கு அழிவு என்பதே கிடையாது. இந்தக் கர்மத்தின் செயல் வடிவமாகிய தர்மத்தைச் சிறிதளவேனும் பழகிவந்தால் கூட பிறப்பு, இறப்பு என்ற மாபெரும் பயத்தில் இருந்து மீட்க வல்லதாக அமையும். அதாவது, கர்மத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதுவே தர்மம் ஆகும்” என்கிறார்.

இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மமானது (சாதனைப் பாதை) அதைச் செய்கின்ற சாதகன் தன்னுடைய சுபாவத்தில் (அக இயல்பில்) அடையப் பெற்றுள்ள திறனை அடிப்படையாகக் கொண்டு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கர்மத்தைப் புரிந்து கொண்டு ஒருவன் எப்பொழுது அதனை ஆரம்பிக்கிறானோ, அந்த ஆரம்பநிலையில் அவன்

'சூத்திரன்' என்றழைக்கப்படுகிறான். படிப்படியாக, சாதனை விதிமுறை பிடிக்குள் வந்து விட்டால் அவன் 'வைசியன்' எனப்படுகிறான். இயற்கையின் மோதலில் இருந்து பின்வாங்காத திறன் மற்றும் வீரம் ஆகியவை கிடைத்த பிறகு அவனேதான் 'க்ஷத்திரியன்' மற்றும் பிரம்மத்திற்குள் நுழைவு பெறும் வல்லமை – ஞானம் (இறைவனைப்பற்றிய உண்மை அறிவு), விஞ்ஞானம் (இறைவனுடைய திருவாக்குகளுடன் இணைவு பெறுதல்), அந்த நிலைப்பாட்டில் மட்டுமே உறுதியான சார்புடைமை, ஆகிய தகுதிகள் வந்த பிறகு அவனேதான் 'பிராம்மணன்' எனப்படுகிறான். எனவேதான் யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், (அத்தியாயம் 18/ 46–47) "ஒருவன் தன்னுடைய சுபாவத்தில் அடையப் பெற்றுள்ள திறனுக்கு ஏற்பக் கர்மத்தில் ஈடுபடுவதே அவனுடைய 'சுயதர்மம்' எனப்படுகிறது. குறையுடையதாகவே இருந்தாலும்கூட சுபாவத்தில் காணக் கிடைக்கும் சுயதர்மமே மிகவும் நன்மை பயக்க வல்லதாகும். மேலும், எதிர்பார்க்கப்படுகின்ற கர்மத்திறனை வளர்த்துக் கொள்ளாமலேயே, மற்றவர்களால் உயர்நிலைத்திறனுடன் நிறைவேற்றப்படுகின்ற கர்மத்தைப் பின்பற்றுவதோ தீமையை விளைவிப்பதாகும். சுயதர்மத்தைப் பின்பற்றுவதால் மரணமே வந்தாலும் கூட மேன்மையானதுதான். ஏனெனில், ஆடைதான் (உடல்) மாறுகிறதே தவிர, ஆடையை அணிபவன் (ஜீவாத்மா) மாறுவதில்லையே! அவனுடைய சாதனை வரிசைத் தொடராக மறுபடியும் எவ்விடத்தில் நின்று போனதோ, மீண்டும் அங்கிருந்தே ஆரம்பமாகி விடுகிறது. சாதனைப்படி நிலைகளை எல்லாம் ஒவ்வொன்றாகக் கடந்து சென்று அவன் பரமஸித்தியாகிய அழிவற்ற பரமபதத்தை அடைந்து விடுவான்.

இதையே அவர் மீண்டும் வலியுறுத்தும் வகையில், "பரமாத்மாவில் இருந்துதான் எல்லா உயிரினங்களும் தோன்றின. அவரே எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர். சுபாவத்தில் இருந்து தோன்றிய திறனுக்கு ஏற்ப, அவரை, விதிமுறைப்படி வழிபட்டு, மனிதர்கள் பரமஸித்தியை அடையப் பெறுகின்றனர். அதாவது, நிச்சயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப, அந்த ஏக இறைவனைச் சிந்தனை செய்வதே தர்மம் ஆகும்" என்கிறார்.

தர்மத்தில் நுழைவு பெறுகின்ற அதிகாரம் எவருக்கெல்லாம் உள்ளது? அதனைக் கடைப்பிடிக்கின்ற அதிகாரம் யாருக்கெல்லாம் கொடுக்கப்பட்டுள்ளது? இவற்றை எல்லாம் தெளிவுபடுத்தும் வகையில் யோகேஷ்வரர், "அர்ஜுனா! மிகவும் தீயநடத்தை உள்ளவன்கூட, நிலைத்த (அனன்ய) உணர்வுடன் என்னை வழிபடுவானேயானால், அதாவது, என்னை விட்டுவிட்டு மற்ற பிற தெய்வங்கள் எதையும் வழிபடாமல், என்னை மட்டுமே வழிபடுவானேயானால், அவன், **க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா'** – வெகு சீக்கிரமே தர்மாத்மாவாகி விடுவான். அவனுடைய ஆன்மா தர்மத்துடன் இணைவு பெற்று விடும்." என்கிறார். ஆகவே,

ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்த வரையில் எவனொருவன் பரமாத்மாவிடம் நிலைத்த உறுதிப்பாட்டுடன் **(அனன்ய நிஷ்டா)** இருக்கிறானோ, அவனே, 'தர்மாத்மா' எனப்படுகிறான். எவன் ஒருவன் தன்னுடைய சுபாவத்தினால் நிச்சயிக்கப்பட்டுள்ள கர்மத்திறனுக்கு ஏற்ப, பரமாத்மாவை அறிகின்ற, ஆன்மீகத் தேடலில் மூழ்கியிருக்கிறானோ, அவனே 'தர்மாத்மா' எனப்படுகிறான்.

அவர் இறுதியாக, **"ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ'** – அர்ஜுனா! எல்லா தர்மங்களைப் பற்றிய கவலைகளை விட்டுவிட்டு என்னுடைய சரணத்திற்கு மட்டும் வந்து விடு" என்கிறார். ஆகவே, பரமாத்மா ஒருவரிடம் மட்டுமே தன்னைச் சமர்ப்பணம் செய்கிறவன் எவனோ, அவனே தர்மாத்மா ஆவான். பரமாத்மா ஒருவரிடம் மட்டும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது ஒன்றே தர்மம் ஆகும். அந்தப் பரமாத்மா ஒருவரை மட்டுமே அடைவதற்காக, அவரால் நிச்சயிக்கப்பட்டுள்ள செயல்களை செய்வதே தர்மம் ஆகும். இந்த நிலையை அடைந்த மகாபுருஷர், ஆன்மாவில் மட்டுமே திருப்தியடைகின்ற அத்தகைய மகாபுருஷர்களின் சித்தாந்தம் ஒன்று மட்டுமே இந்த ஒட்டு மொத்தப் படைப்பில் தர்மம் என்று ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும். அந்த மகாபுருஷர்கள் எவ்வாறு இந்தப் பரமாத்மாவை அடைந்தனர் என்பதை அறிந்து கொள்வதற்காக அனைவரும் அவர்களுடைய சரணத்திற்கேதான் செல்ல வேண்டும். அவர்கள் எந்த மார்க்கத்தின் வழியாகச் சென்றனர்? என்றால் அந்த மார்க்கமும் எப்போதும் ஒன்றேதான். அந்த மார்க்கத்தில் செல்வது ஒன்று மட்டும்தான் தர்மம் ஆகும்.

தர்மம் என்பது மனிதர்களால் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த நடைமுறையும் ஒன்றேதான். **'வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குரு நந்தன'** (2/41) – இந்தக் கர்ம யோகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள கிரியை (செயல்) ஒன்றுதான் – அதுவே, 'புலன்களின் புறமுகச் செயல்பாடுகள், மற்றும், மனத்தின் புறமுக இயக்கங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி ஆன்மாவில் (எல்லாம் வல்ல இறைவனில்) நிலைநிறுத்துதல்' என்பதாகும். (4/27)

## தர்ம வேறுபாடு அல்லது மதவேறுபாடு

சனாதன தர்மம் பிறந்த பாரத தேசத்தில் தீயநெறிகள் எவ்வளவு தூரம் வரை பெருகியிருந்தன என்றால், முகம்மதியர்களின் படையெடுப்பின்போது, அந்த ஆக்கிரமிப்பாளர்களின் கைகளில் இருந்து, வலுக்கட்டாயமாகவோ அல்லது வேறு வழியின்றியோ ஒரு எச்சிலாக்கப்பட்ட ரொட்டியை உண்டதாலும் எச்சிலாக்கப்பட்ட நீரை அருந்தியதாலும் இந்து சமுதாயத்தினரின் தர்மம் எல்லாம் அழிந்து போய்விட்டதாகக் கருதப்படுகின்ற அளவிற்குப் போயிருந்தன. தர்மத்தில்

இருந்து நெறி தவறியவர்களாக அறிவிக்கப்பட்ட ஆயிரமாயிரம் இந்துக்கள் இந்தக் குற்றச் சாட்டுதலைக் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர். அவர்கள் தர்மத்திற்காக உயிரை விடவும் தயாராக இருந்தனர். ஆனால், தர்மத்தைப் பற்றி ஒன்றும் புரியாதிருந்தனர். தர்மம் என்பதோ அவர்களுக்காக வெறும் தொட்டாற்சிணுங்கிச் செடியாகிவிட்டது. அந்தத் தொட்டாற் சிணுங்கிச் செடியாவது தொட்டால் மட்டும்தான் சுருங்கும். விட்டு விட்டாலோ மீண்டும் மலர்ந்து பழைய நிலைக்கே திரும்பி விடும். ஆனால், என்றும் நிலையானது, மாறாதது எனப்படுகின்ற இவர்களது சனாதன தர்மமோ மீண்டும் மலரவே முடியாதபடிக்கு ஒரேயடியாக வாடி உலர்ந்து போய்விட்டது. எந்த, என்றும் நிலையான, மாறாத, சனாதன ஆத்மாவை உலகியலைச் சேர்ந்த எந்தவொரு பொருளாலும் நெருங்கவோ, தொடவோ கூட முடியாதோ, அது, தொடுவதாலோ, உண்பதாலோ நஷ்டமடைந்து விடுமா என்ன? நீங்கள் என்னவோ வாளால்தான் வெட்டிக் கொல்லப்படுவீர்கள் என்றால், உங்களுடைய தர்மமோ வெறுமனே தொடுவதாலேயே இறந்து போய்விடுகிறது? உண்மையிலேயே தர்மம் அழிந்து போய்விட்டதா என்ன? ஒருபோதும் இல்லை. தர்மத்தின் பெயரால் ஏதோ தீயநெறியைப் பழகி வந்தனர், அதுவே அழிந்து போய்விட்டது. ஃபிரோஜ் துக்ளக் என்பவனுடைய அரசாட்சி நடந்து கொண்டிருந்தபோது, அரசசபை நீதிபதியாக இருந்த ஹாஜி முகிசார்தீன் முகீஸூதீன் என்பவன் பின்வருமாறு ஒரு தீர்ப்பினை எழுதி வைத்துள்ளான், அதன்படி:

“எப்பொழுதும் இந்துக்கள் தங்களுடைய வாயைத் திறந்து வைத்திருக்க வேண்டும். ஒருவேளை, முஸ்லீம்கள் எவரேனும் எச்சில் துப்பவேண்டுமென்றால் அவர்களுடைய திறந்திருக்கும் வாயில் துப்பினால்போதும். அந்த இந்துக்களும்கூடத் தர்மவான்களாகி விடுவர். ஏனெனில், அவர்களிடம் ஒரு தர்மமும் இல்லை”.

அவனும்தான் அப்படி என்ன தவறாகச் சொல்லிவிட்டான்? வாயில் துப்பப்பட்டதால் ஒருவன்தானே முஸ்லீமானான்? ஆனால், கிணற்றில் துப்பியதால் ஆயிரக்கணக்கானோர் முஸ்லீம்களாக ஆக்கப்பட்டு விட்டனர். உண்மையில், அந்த மாதிரியாக நடந்து கொண்ட முஸ்லீம்களைக் கீழ்த்தரமானவர்கள் என்பதா? அல்லது, இதை எல்லாம் உண்மையென்று ஏற்றுக் கொண்டு தலையாட்டிக் கொண்டிருந்த இந்துக்களைக் கீழ்த்தரமானவர்கள் என்பதா?

எவரெல்லாம் இந்த மாதிரியான முறைகளில் மதமாற்றங்கள் செய்தார்களோ, அவர்கள் எல்லாம் அந்த தர்மத்தை அடைந்தார்களா என்ன? இந்துவை முஸ்லீம் என்று மாற்றுவதோ, ஒருவகையான வாழ்க்கை நடைமுறையில் இருந்து மற்றொரு வகையான வாழ்க்கை நடைமுறைக்கு மாறிக் கொள்வதோ

ஒன்றும் தர்மம் என்று சொல்லப்படவில்லையே! இந்த விதமாகக் கொடுமையான திட்டங்களை எல்லாம் தீட்டிக் கொண்டு, சூழ்ச்சியான செயல்பாடுகளை வகுத்துக் கொண்டு, பழிவாங்கும் காரியங்களில் ஈடுபட்ட இவர்கள் எல்லாம் தர்மாத்மாக்களா என்ன? அவர்களெல்லாம் அனைத்தையும் விட மிகவும் மட்டமான, கீழ்த்தரமான, இன்னபிற தீயநெறிகளுக்கு இரையான கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இந்துக்கள் எல்லாம் அந்த தீயநெறிகளில் போய் மாட்டிக் கொண்டனர். நாகரீக வளர்ச்சியற்று, நாடோடிகளாக வாழ்ந்து வந்த மக்கள் கூட்டத்தை நாகரீக முடையவர்களாக மாற்றுகின்ற நோக்கத்துடன் முஹம்மது பெருமகனார் அவர்கள், திருமணம், மணமுறிவு, உயில், கொடுக்கல்—வாங்கல், வட்டி, வழக்கில் சாட்சிகூறல், சத்தியம் செய்தல், பிராயச் சித்தம், விரதம், உணவுமுறை, அன்றாட நடைமுறை வாழ்க்கை முதலிய விஷயங்களை எல்லாம் ஒழுங்குமுறைப்படுத்தி ஒரு சமுதாய அமைப்பை உருவாக்கினார். மேலும், சிலை வழிபாடு, விபச்சாரம், திருட்டு, குடிப்பழக்கம், சூதாட்டம், தாய், பாட்டி, உறவுமுறைகளில் திருமணம் செய்தல், ஆகியவற்றையெல்லாம் தடை செய்தார். ஓரினச் சேர்க்கை மற்றும் பெண்கள் மாதவிலக்காக இருக்கும் போது உடலுறவில் ஈடுபடுதல் ஆகியவற்றைத் தடை செய்ததுடன் ரம்ஜான் நோன்புக் காலங்களில் மட்டும் இவற்றின் மீதான தடைகளைத் தளர்த்தினார். சொர்க்கத்தில் நிறைய அனுபவப்பதற்க்கு சமவயதுடைய, யாரும் இதற்கு முன் தொட்டிராத அழகிய நங்கையர் மற்றும் இளவயது பாலகர்கள் பற்றிய ஆசை வார்த்தைகளைக் கூறினார். இதெல்லாம் தர்மமே இல்லை. ஒரு வகையான சமுதாய அமைப்பு மட்டுமே ஆகும். இவ்வாறெல்லாம் சொல்லி, சிற்றின்ப போகங்களில் மூழ்கிக் கிடந்த சமுதாயத்தை, அவற்றில் இருந்து திசை மாற்றித் தம்மை நோக்கி வருமாறு செய்தார். 'பெண்களுக்குச் சொர்க்கத்தில் எத்தனை ஆண்கள் கிடைப்பார்கள்?' என்பதைப் பற்றி எல்லாம் அவர் சிந்திக்கவில்லை. இது அவருடைய குற்றமும் இல்லை. குற்றமானது அந்த தேசம் மற்றும் காலம், அவலமான சூழ்நிலையினுடையது. அந்தச் சமுதாய அமைப்பில் பெண்களுடைய மனபோக்குகளைப் பற்றியெல்லாம் எவருமே பொருட்படுத்தாத நிலையிருந்ததே இதற்குக் காரணம் ஆகும்.

முஹம்மது பெருமகனார் எதனை 'தர்மம்' என்று கூறினாரோ, அந்தப் பக்கத்தில் ஒருவருடைய கவனமும் செல்லவேயில்லை. அவர், "எவனொருவனுடைய ஒவ்வொரு மூச்சுக் காற்றும் அந்த இறைவனுடைய திருநாமத்தை நினைக்காமல் வெறுமனே வெளியேறுகிறதோ, அவனிடம், அந்த இறைவன், 'நியாயத் தீர்ப்பு நாளில்' (கயாமத்) ஒரு பாவியிடம் பாவக் கணக்கிற்குப் பதில் சொல்லுமாறு கேட்பதைப் போலவே கணக்குக் கேட்பார். அதற்கு அளிக்கப்படும் தண்டனையோ என்றென்றைக்குமாக நரகம் ஆகும்" என்றார்.

அதன்படிப் பார்த்தால், 'என்னுடைய மூச்சுக் காற்று வெறுமனே வெளியேறாமல், இறைவனுடைய திருநாமத்தை நினைத்தபடியே வெளியேறுகிறது' என்று சொல்லும்படியாக வாழும் உண்மையான முஸ்லீம்கள் எத்தனை பேர் உள்ளனர்? கோடிப் பேர்களில் அப்படி ஒருவராவது இருப்பாரோ என்னவோ? மீதமுள்ள அனைவரின் மூச்சுக் காற்றும் வெறுமனேதான் வெளியேறுகிறது. அவர்களுக்குக் கிடைக்கப் போகும் தண்டனையும் பாவிகளுக்கென்று உறுதி செய்யப்பட்டுள்ள நரகம் அல்லாமல் வேறென்ன? இதைத் தனியாகச் சொல்லவேண்டிய அவசியம் ஒன்றும் இல்லைதான்! மேலும், முஹம்மது பெருமகனார் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"எவனொருவன் யாருக்கும் துன்பம் விளைவிப்பதில்லையோ, (பசுக்களுக்கும்) மற்ற உயிரினங்களுக்குத் தீங்கு செய்வது இல்லையோ, அவன், ஆகாயத்தில் இருந்து இறைவனுடைய குரலைக் கேட்கிறான்."

இது எல்லா இடங்களுக்கும் தான் பொருந்துகிறது. ஆனால், அவருக்குப் பின்னால் வந்தவர்கள் தங்களுக்கென்று சாதகமானவொரு புதிய வழியை உருவாக்கிக் கொண்டனர். அதன்படி, 'மெக்காவில் மசூதி அமைந்துள்ள இடத்தில், நாற்புறமும் வளர்ந்துள்ள புல்லை வெட்டக் கூடாது. அந்த மசூதி அமைந்துள்ள இடத்தில் எந்த மிருகத்தையும் கொல்லக்கூடாது. அவ்விடத்தில் யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது' என்ற அளவிற்கு மட்டும் சட்டம் இயற்றி வைத்துக் கொண்டு, சுற்றி வளைத்து எங்கே ஆரம்பித்தார்களோ, அங்கேயே போய் நின்று கொண்டு விட்டனர். இறைவனுடைய குரலைக் கேட்பதற்கு முன்பு முஹம்மது பெருமகனார் ஏதேனும் மசூதியைக் கட்டினாரா என்ன? அவருக்கு ஏதேனும் ஒரு மசூதியில் இருந்தா திருக்குர்ஆனின் ஆயத்துகள் (சுலோகங்கள்) இறங்கின? இந்த மசூதியில் அவரது ஞாபகச் சின்னங்கள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன, அவ்வளவுதான்! முஹம்மது பெருமகனாரின் விருப்பத்தை 'தப்ரேஜ்' அறிந்திருந்தார். 'மன்சூர்' அறிந்து இருந்தார். 'இக்பால்' அறிந்து இருந்தார். ஆனால், அவர்கள் எல்லாம் மதவெறியர்களின் தாக்குதல்களுக்கு இரையானார்கள்; பல்வேறு வகையான கொடுமைகளுக்கு ஆளானார்கள். கிரேக்கத்தில் பிறந்த சாக்ரடீஸிற்கு விஷம் கொடுக்கப்பட்டது. ஏனெனில், அவர் மக்களை எல்லாம் நாத்திகர்களாக மாற்றிக் கொண்டு இருந்தாராம்! இதேபோன்ற பழிதான் இயேசு கிறிஸ்துவின் மீதும் சுமத்தப்பட்டது. அவரைச் சிலுவையில் அறைந்தனர். ஏனெனில், அவர் யூதர்களின் ஓய்வு நாளில்கூட வேலை செய்தாராம்! குருடர்களுக்குப் பார்வை அளித்தாராம்! இதேதான் இந்தியாவிலும் நடந்தது, எப்பொழுதெல்லாம் எவரேனும் ஒரு இறைவனை நேரடியாக தரிசனம் செய்து ஞானம் பெற்ற தத்துவதரிசியான

மஹாபுருஷர் சத்தியத்தைப் பற்றி அறிவுறுத்தும் பணியில் ஈடுபடுகிறாரோ, அப்பொழுதெல்லாம் இந்தக் கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள்; மடங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் புண்ணியத் தலங்கள் என்ற பெயரில் தங்களுடைய உலகியல் வாழ்க்கையை நடத்திவருகின்ற, இந்த அமைப்புகளின் மூலம் தங்களுடைய பிழைப்பை நடத்தி வருகின்ற போலிக் கும்பல் அந்த மஹாபுருஷரை நோக்கி எதிர்க்கூச்சல் போடுவதும் 'அதர்மம்! அதர்மம்!!' என்று கூக்குரல் எழுப்புவதுமாக இருக்கின்றனர். இந்தக் கும்பலைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மதத்தின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது என்றால் மற்றவர்களுக்கு அரிசி, பருப்பு மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அளவு ஏதோ கொஞ்சம் பணம் கிடைத்து விடுகிறது. உண்மையைப் பற்றிய பிரச்சாரத்தைக் கண்டதும் அவர்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்பில் ஏதேனும் மண் விழுந்துவிடுமோ என்ற பயத்திற்கு ஆளாகி விடுகின்றனர். அவர்கள் சத்தியத்தை வளரச் செய்ய விரும்புவதில்லை. அவர்களால் அது முடியாத காரியமும் கூடத்தான். இதைத் தவிர, அவர்கள், உண்மையான மகாபுருஷர்களுடன் எதிர்ப்புணர்வுடனும் விரோத மனப்பான்மையுடனும் நடந்து கொள்வதற்கு வேறு எந்தக் காரணமும் கிடையாது. நெடுங்காலத்திற்கு முன் எழுப்பப்பட்ட இந்த ஞாபகார்த்த இடங்களும் நினைவு மண்டபங்களும் எந்தக் காரணங்களுக்காக எழுப்பப்பட்டனவோ, அதைப் பற்றிய எந்த அறிவும் இவர்களுக்குக் கிடையாது.

**இல்லறத்தார்களின் உரிமை:-**

எப்பொழுது கர்மம் என்பதன் உண்மையான உருவம் இதுவே எனப்படுகிறதோ, அதாவது, ஏகாந்தமான இடத்தில் வாழ்தல், புலனடக்கம், மனக் கட்டுப்பாடு, நிரந்தரமான ஆன்ம சிந்தனை, மற்றும், தியானத்தில் ஈடுபடுதல் மட்டுமே 'கர்மம்' என்றால், கீதை இல்லறத்தாருக்கு உபயோகமற்றது; கீதை சாதுக்களுக்கு மட்டுமே பொருத்தமானது' – இவ்வாறுதான் பெரும்பாலோர் கேட்கின்றனர். ஆனால், உண்மையில் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. கீதையின் அடிப்படையில், கீதையானது இந்தப் பாதையில் செல்ல ஆரம்பித்துவிட்ட சாதகன், மற்றும், இந்தப் பாதையில் செல்ல விரும்பும் அனைவருக்குமானது. கீதை, மனித குலம் அனைத்திற்கும் பொதுவான செய்தியை உள்ளடக்கிய நூலாகும். நல் இல்லற வாசிகளுக்காக இது சிறந்த முறையில் பயன்படுகின்ற நூலாகும். ஏனெனில், அங்கிருந்துதான் கர்மம் ஆரம்பம் ஆகிறது.

ஸ்ரீகிருஷ்ணர், "அர்ஜுனா! இந்த பற்றற்ற கர்ம யோகத்தில் ஆரம்பத்திற்கு அழிவு என்பதே இல்லை. இதனைச் சிறிதளவு கடைப்பிடித்து வந்தாலும்கூட

மாபெரும் பிறப்பு, இறப்பு என்ற பயத்தில் இருந்து மீட்ட பிறகுதான் அமைதியடைகிறது" என்று கூறுகிறார். இப்போது, சாதனையைச் சிறிதளவு கடைப்பிடிப்பவன் எவனாக இருக்க முடியும்? என்பதை நீங்களே கூறுங்களேன். இல்லறத்தில் இருப்பவனா? அல்லது, விரக்தனா? (இங்கே 'விரக்தன் என்பதற்கு, 'இறைவனை அடையவேண்டும் என்ற திடவைராக்கியம் பூண்டு அனைத்து ஆசைகளையும் வெறுத்து ஒதுக்கியவன்' என்று பொருள் கொள்ளவும்.) இல்லறத்தில் இருப்பவன் மட்டுமே இந்த சாதனையைப் பழகுவதற்கென்று அதிக நேரத்தை ஒதுக்குகிறான். எனவே, இது அவனுக்காகச் சொல்லப்பட்டதுதான். ஸ்ரீகிருஷ்ணர் நான்காவது அத்தியாயம் முப்பத்தி ஆறாவது சுலோகத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"அர்ஜுனா! ஒருவேளை நீ எல்லாப் பாவிகளை விடவும் அதிகளவு பாவம் செய்தவனாக இருந்தாலும்கூட, ஞானம் என்னும் படகில் ஏறிச் சந்தேகமேயில்லாமல் கரைகடந்து விடுவாய்." பெரியபாவி யாராக இருக்க முடியும்? எவனொருவன் எந்நேரமும் ஆன்ம சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறானோ, அவனா? அல்லது இனிமேல்தான் ஆன்ம சிந்தனையை ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறானே, அவனா? ஆகவே, நல் இல்லற வாழ்வில் இருந்துதான் (க்ருஹஸ்த ஆசிரமம்) இந்தக் கர்மம் ஆரம்பிக்கிறது. ஆறாவது அத்தியாயம் முப்பத்தி ஏழாவது சுலோகத்தில் இருந்து, நாற்பத்தி ஐந்தாவது சுலோகம் வரைக்கும் இடம்பெற்றுள்ள பகுதியில் அர்ஜுனன், "பகவானே! குறைந்த அளவு முயற்சியுடைய, ஆனால், நம்பிக்கையுடன் கூடியவன் பரமகதியை அடையாமல் எந்தத் தாழ்ந்த கதியை அடைகிறான்?" என்று கேட்டான். அதற்கு ஸ்ரீகிருஷ்ணர், "அர்ஜுனா! யோகத்தில் இருந்து வழி தவறிச் சென்ற, அந்தக் குறைந்த அளவு முயற்சியுடையவனுக்கும் ஒருபோதும் அழிவு ஏற்படுவதில்லை. அந்த யோகத்தில் இருந்து தவறியவன் (யோக ப்ரஷ்டன்) ('**சுசீனாம்**–' சத்தியப் பாதையில் தூய்மையான, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிப்பவரையே 'ஸ்ரீமான்' என்கிறோம்) ஸ்ரீமான்களின் வீட்டில் பிறந்து, யோகிகளின் குலத்தில் நுழைவு பெற்று விடுகிறான். அவன் ஆன்மீக சாதனையில் தீவிரமாக ஈடுபட ஆரம்பிக்கிறான். மேலும், எத்தனையோ பிறவிகளைக் கடந்து சென்று, எதனை 'பரமகதி' என்றும் 'பரமபதம்' என்றும் சொல்கிறோமோ அதனை அடையவும் செய்கிறான். இந்தக் குறைந்த அளவு முயற்சியைச் செய்வது யார்? யோகத்தில் இருந்து தவறிய பிறகு அவன் எங்கே பிறக்கிறான்? இல்லறத்தில்தானே! அங்கிருந்துதான் அவன் மீண்டும் சாதனையின் பக்கமாகத் தனது கவனத்தைத் திருப்புகிறான். ஒன்பதாவது அத்தியாயம் முப்பதாவது சுலோகத்தில் அவர், "மிகவும் கெட்ட நடத்தை உள்ளவன்கூட, ஒருவேளை நிலைத்த (அனன்ய) உணர்வுடன் என்னை வழிபடுவானேயானால் அவன் 'சாது' என்று அழைக்கப்படும்

தகுதியுடையவன்தான். ஏனெனில், அவன் மிகுந்த உறுதிப் பாட்டுடன் இணைந்தவனாக, சரியான பாதையில் செல்ல ஆரம்பித்து விட்டான்" என்கிறார். எவனுக்கு மிகவும் கெட்ட நடத்தை உள்ளவனாக இருக்கின்ற வாய்ப்பு உள்ளது? எவன் இறைவழிபாட்டில் முன்னேறிச் சென்று கொண்டுள்ளானோ அவனா? அல்லது, இன்னும் இறைவழிபாட்டையே ஆரம்பிக்காமல் இருக்கிறானே அவனா? மேலும் அவர் ஒன்பதாவது அத்தியாயம் முப்பத்தி இரண்டாவது சுலோகத்தில், "பெண்கள், வைசியர், சூத்திரர் மற்றும் தாழ்ந்த பிறவிகளை அடைந்தவர் (பாவ யோனி) என்று எவராக இருந்தாலும், என்னை மட்டுமே அடைக்கலமாகி சாதனை செய்வதன் மூலமாகப் பரமகதியை அடைவார்கள்" என்கிறார். இந்து, கிறிஸ்தவர், முஸ்லீம் என்றெல்லாம் ஸ்ரீகிருஷ்ணர் ஒன்றும் கூறவில்லை 'மிகவும் தீயநடத்தையுள்ள பாவியாக இருந்தாலும்கூட, எனது சரணத்தை அடைந்து பரமகதியைப் பெறுகிறார்கள்" என்றுதான் கூறுகிறார். ஆகவே, கீதை அனைத்து மனித குலத்திற்கானது. நல்இல்லறவாழ்வில் இருந்துதான் இந்தக் கர்மம் ஆரம்பமாகிறது. படிப்படியாக அவன்தான் நல்இல்லற வாழ்வில் இருந்து கொண்டே யோகி ஆகிறான்; முழுமையான தியாகி ஆகிறான். மேலும், தத்துவத்தை நேரடியாக தரிசனம் செய்து அந்த மேலான, பரம்பொருளாகிய இறைவனில் நுழைவும் பெறுகிறான். இந்நிலையையே ஸ்ரீ கிருஷ்ணர், "இத்தகைய ஞானியே என்னுடைய ஆன்ம வடிவமானவன்" என்றும் குறிப்பிடுகின்றார்.

**பெண்கள்:–**

கீதையைப் பொறுத்த வரையில் இந்த உடல் என்பது வெறும் ஆடை மட்டும்தான். எவ்வாறு பழையதாகிப்போன ஆடையைத் தூக்கிப் போட்டுவிட்டு, புதிய ஆடையை அணிந்து கொள்கிறார்களோ, அதேபோன்றுதான் பஞ்ச பூதங்களாகிய ஐந்து தத்துவங்களால் உருவான இந்த உடலுக்குத் தலைவனாகிய ஜீவாத்மா உடலாகிய இந்த ஆடையைத் துறந்து விட்டு மற்றொரு உடலை (ஆடையை) ஏற்றுக் கொள்கிறது. உடலைப் பொறுத்த அளவில் நீங்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும்சரி, அது ஆடையின் (உடல்) வெளித் தோற்றம் மட்டுமேயாகும்.

இந்த உலகில் மனிதர் இருவகைப்படுவர். க்ஷரர் (அழிவுறுபவர்) மற்றும் அக்ஷரர் (அழிவற்றவர்). மனிதர்உட்பட, ஒட்டு மொத்த உயிரினங்களின் உடல் (க்ஷர புருஷர்) அழிவுறுபவை அல்லது மாற்றத்திற்கு உட்படுபவை எனப்படுகிறது. மனம் மற்றும் புலன்கள் எப்பொழுது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டதோ, அப்பொழுது அந்த மனிதர் (அக்ஷர புருஷர்) அழிவற்றவர் எனப்படுகிறார். அவருக்கு ஒருபோதும் அழிவு என்பதே இல்லை. இது இறைவழிபாட்டின் மூலமாக அடையப்படுகின்ற ஆன்மீக உயர்நிலையாகும்.

பெண்களுக்குச் சிலகால கட்டங்களில் மரியாதையும் சிலகால கட்டங்களில் அவமரியாதையும் இந்தச் சமுதாயத்தால் காட்டப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், மனித சக்திக்கெல்லாம் அப்பாற்ப்பட்ட (அபௌருஷேயம்) இறைவாக்குகள் அடங்கப்பெற்று உள்ள கீதையோ, "சூத்திரர் (குறைவான சாதனை அறிவுடையவர்), வைசியர் (ஆன்மீக சாதனை விதிமுறைகளை அறிந்தவர்), பெண்கள், ஆண்கள் என்று யாராக இருந்தாலும் என்னுடைய சரணத்தை அடைந்து பரமகதியைப் பெறுகிறார்கள்" என்கிறது. ஆகவே, இந்தப் பரம நன்மையை உண்டாக்கவல்ல ஆன்மீகப்பாதையில் ஆண்களுக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உள்ளதோ, அதேயளவு முக்கியத்துவம் பெண்களுக்கும் தரப்பட்டு உள்ளது.

**உலகியல் வளமை:-**

கீதை பரம நன்மையாகிய பரமாத்மாவைப் பெற்றுத் தருவதுடன் சேர்த்து மனிதர்களுக்குத் தேவையான உலகியல் வளங்களை அடைவதற்கான வழிமுறைகளையும் கொண்டுள்ளது. ஒன்பதாவது அத்தியாயம் இருபதாவது சுலோகத்தில் இருந்து இருபத்தி இரண்டாவது சுலோகம் வரைக்கும் யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், "பெரும்பாலோர், இந்த நிச்சயிக்கப்பட்டுள்ள விதிமுறைப்படி என்னை வழிபட்டு, அதற்குப் பதிலாக சொர்க்கத்தை அடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கு விசாலமான சொர்க்கலோகம் கிடைக்கிறது. நானும் தருகிறேன்! எவன் எதைக் கேட்கிறானோ, என்மூலமாக அவனுக்கு அது கிடைக்கிறது. ஆனால், அதை அனுபவித்தபிறகு, அந்த போகம் அழிந்துபோய்விடுகிறது. ஏனெனில், சொர்க்கத்தின் போகமும் அழியக் கூடியதுதான். அவன் மீண்டும் பிறவியெடுக்க வேண்டியிருக்கும். என்னுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் அவன் நஷ்டமடைவதில்லை. ஏனெனில், நான் பரமநன்மையே வடிவானவன். நான் அவனுக்கு எல்லா இன்பங்களையும் வழங்குகிறேன். மேலும், கொஞ்சம் கொஞ்சமாக அவற்றிலிருந்தெல்லாம் அவனை விடுவித்து மறுபடியும் நன்மையின் பாதைக்குத் திருப்பி விடுகிறேன்.

**க்ஷேத்திரம்:-**

எந்த பரமாத்மாவின் திருவாயிலிருந்து வெளிப்பட்ட இறைவாக்குகளே இந்த கீதை எனப்படுகிறதோ, அவரே முன்னின்று இவ்வாறு கூறுகிறார் :- **"இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ர மித்யபிதீயதே"** 'அர்ஜுனா! இந்த உடலே க்ஷேத்திரம் (வயல்) எனப்படுகிறது. அதில், விதைக்கப்படுகின்ற நல்லவை மற்றும் கெட்டவை எனப்படும் கர்மவிதைகளே வினைகளின் வடிவில் முளைத்தெழுகின்றன. மேலும், காலப்போக்கில் சுகம் மற்றும் துக்கம் ஆகிய வடிவம் எடுத்து அனுபவம் (போகம்) என்னும் வடிவில் கிடைக்கிறது. அசுரச்

செல்வம் (குணம்) தாழ்ந்த, மற்றும், கீழான பிறவிகளுக்கு நம்மைக் கொண்டு செல்கின்றன. அதே சமயம், தெய்வீகச் செல்வம் (குணம்) பரம தெய்வமாகிய பரமாத்மாவிற்குள் நுழைவு பெற்றுத் தருகின்றன. ஸத்குருவின் சரண சான்னியத்தித்தை அடைந்த பிறகுதான் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கின்ற யுத்தம் ஆரம்பம் ஆகிறது. அதுவே, க்ஷேத்திரம் – க்ஷேத்திரக்ஞருக்கு இடையில் மூளும் யுத்தம் எனப்படுகிறது.

கீதையின் உரையாசிரியர்கள், ‘‘ஒரு குருக்ஷேத்திரம் வெளியில் இருக்கிறது. மற்றொன்று, மனத்தின் உள்ளே இருக்கிறது. கீதையின் ஒரு அர்த்தம் புறம் சம்பந்தப்பட்டது” மற்றொரு அர்த்தம் “அகம் சம்பந்தப்பட்டது”. என்கிறார்கள். ஆனால், உண்மையில் அப்படியெல்லாம் ஒன்றுமே கிடையாது. சொல்பவர் (வக்தா) ஒன்றைத்தான் சொல்கிறார். ஆனால், கேட்பவர் (ஸ்ரோதா) தன்னுடைய புத்திக்கு ஏற்பவே அதனைப் புரிந்துகொள்கிறார். எனவேதான், பல்வேறு அர்த்தம் இருப்பதை போன்று தோன்றுகிறது. சாதனைப் பாதையில் வரிசையாகச் சென்று, எவரொருவர் ஸ்ரீகிருஷ்ணரின் நிலையை அடைகிறாரோ, எந்தக் காட்சியானது ஸ்ரீகிருஷ்ணரின் முன்பிருந்ததோ, அதுவே அவருக்கும் வாய்க்கப் பெற்று விடுகிறது. அத்தகைய மகாபுருஷரே ஸ்ரீகிருஷ்ணரின் அகவியல் உணர்வுகளை, கீதையின் சங்கேத மொழியினை (அது குறிப்பால் உணர்த்துவது எதையோ, அதனை) அறிந்து கொள்கிறார்; மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்.

கீதையின் ஒருசுலோகம்கூடப் புறத்தைப் பற்றிய (உலகியல்) விளக்கத்தைத் தரவேயில்லை. உண்பது, உடுப்பது, வாழ்வது எப்படி? என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே! உலகியல் நடைமுறைப்பழக்கங்கள், சமூகம் சார்ந்த மதிப்பீடுகள், உலகியல் சார்ந்த நீதிநெறிக் கோட்பாடு, இவையெல்லாம் தேசம், காலம், இடம், பொருள், பல்வேறு வகையான மாறுபட்ட சூழ்நிலைகள் இவற்றிற்கெல்லாம் சாதகமாக மாறிமாறி அமைத்துக் கொள்ளும் வகையில் இயற்கை அல்லது படைப்பினால் தரப்பட்ட கொடையாகும். இவற்றைப் பற்றியெல்லாம் மஹாபுருஷராகிய ஸ்ரீகிருஷ்ணர் உங்களிடம் என்ன சொல்லப் போகிறார்? எங்கே, பெண்கள் அதிகமாக இருக்கிறார்களோ, அங்கே, பலதார மணம் நடைபெறுகிறது. எங்கே, அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறதோ, அங்கே, ஒன்றுக்கும் மேற்பட்ட சகோதரர்களுக்கு மத்தியில் ஒரு மனைவியுடன் இல்லறம் நடைபெறுகிறது. இவற்றிற்கெல்லாம் ஸ்ரீகிருஷ்ணர் எந்தமாதிரியான அமைப்பியலைத் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்? இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, ஜப்பானில் மக்கள் தொகை மிகவும் குறைந்து போனது, எனவே, அந்நிலையில் முப்பது குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயாருக்கு ‘மதர்லேண்ட்’ (நாட்டின்தாய்) என்ற பட்டம் வழங்கிக்

கௌரவிக்கப்பட்டது. வேதகால பாரதத்தில், முன்பெல்லாம் பத்து குழந்தைகள் பெற்றெடுக்க வழிவகைகள் இருந்தன. ஆனால் இன்றோ, 'ஒன்று அல்லது, இரண்டு குழந்தைகள் போதும், இல்லறம் நலமுடன் திகழும்' என்று கோஷம் எழுப்பப்படுகிறது. அந்தவொரு குழந்தை கூட இல்லாமல் இருந்தால் நாடும் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை. பிரச்சினையும் சுலபமாகத் தீர்ந்து விடும் என்ற நிலை இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணர் இதைப்பற்றி என்ன சொல்ல வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்?

**ச்ரேய:- (உயர்வான) ஆன்மீகவியல்**

காமம், கோபம் லோபம் (பேராசை), மோகம் ஆகியவற்றை எல்லாம் கற்றுக் கொள்வதற்காக எந்தப் பள்ளிக்கூடமும் ஆரம்பிக்கப்படவில்லை. அப்படி இருந்தும் கூடச் சிறுவர்கள் பெரியவர்களை விடவும் இந்த விஷயங்களில் கை தேர்ந்தவர்களாக பன்மடங்கு தேர்ச்சி பெற்று விளங்குகின்றனர். இந்த விஷயத்தில் ஸ்ரீகிருஷ்ணர் என்ன கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்? இவைஅனைத்தும் இயற்கை அல்லது படைப்பின் மூலமாகத் தானாகவே இயக்கநிலை பெற்றுச் செயல்படுகின்றன. ஒரு காலகட்டத்தில் வேதங்கள் கற்பிக்கப்பட்டன. வில்வித்தை, கதாயுதம் ஆகியவை எல்லாம் கற்றுத் தரப்பட்டன. இன்றைய நிலையில் இவற்றை எல்லாம் யார் கற்கிறார்கள்? இன்றோ துப்பாக்கிகள் முழங்குகின்றன. தானியங்கி இயந்திரங்களின் யுகம் இது. ஒரு காலத்தில் இரதங்களை ஓட்டுவதற்குச் சொல்லித் தரப்பட்டது. குதிரைகளின் சாணங்களையெல்லாம் அப்புறப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியிருந்தது – ஆனால், இன்றோ, மோட்டார் வாகனங்களின் புகை வெளிப்படுகின்ற பாகங்கள் கழற்றி, சுத்தம் செய்யப்பட்டு, பிறகு உரிய இடத்தில் பொருத்தப்படுகின்றன. இதைப் பற்றியெல்லாம் ஸ்ரீகிருஷ்ணர் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? 'குதிரையை இப்படித் தேய்க்காதீர்கள் அப்படித் தேய்க்காதீர்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன? வெளியுலகில் உங்களுக்கு எந்த மாதிரியான அமைப்பியலை உருவாக்கித் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? முன்பெல்லாம் 'ஸ்வாஹா' என்று சொல்வதால் மழை பொழிந்தது என்றால் இன்றோ, மனம் விரும்பியதை எல்லாம் விளைவிக்கின்ற அளவிற்கு விவசாயம் முன்னேற்றமடைந்து விட்டது. யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர் கூறுவதைப் போன்று, "இயற்கையில் இருந்து தோன்றிய குணங்களின் மூலமாக பலவந்தமாக ஈர்க்கப்பட்டு மனிதர்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்கின்றனர், அவ்வளவுதான். குணங்கள் தாமாகவே அவர்களை இத்தகைய காரியங்களில் ஈடுபடுத்துகின்ற திறன்படைத்தவை". அறிவியல், சமூகவியல், கல்வியியல், அரசியல் (ஆட்சியியல்),

தர்க்கவியல் ஆகியவற்றில் எத்தனையோவிதமான கோட்பாடுகள் அன்றாடம் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆனால், ஒரேயொரு பொருள் மட்டும் மனித அறிவினால் அறியப்பட முடியாததாகவும் அடையாளம் கண்டு கொள்ள முடியாததாகவும் இருக்கிறது. அவனிடமும் அந்த அறிவு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், மறந்து போகப்பட்ட நிலையில் (விஸ்ம்ருதி) இருக்கிறது. கீதையைக் கேட்டபிறகு, அர்ஜுனனுக்கு அதைப் பற்றிய அறிவுதான் திரும்பவும் ஞாபகத்திற்கு, நினைவிற்கு (ஸ்ம்ருதி) வந்தது. அந்த அறிவே பரமாத்மாவைப் பற்றிய அறிவு எனப்படுவது. இதய தேசத்தில் இருந்த பிறகும்கூட, அது மனித அறிவிற்கு வெகு தூரத்தில், அப்பால் இருக்கிறது. அதையே மனிதன் அடைய விரும்புகிறான். ஆனால், அதை அடையும் வழி தெரியவில்லை. பரம நன்மையைத் தரவல்ல இந்த ஆன்மீகப் பாதையைப் பற்றி மட்டும்தான் மனிதன் ஒன்றும் அறியாமல் இருக்கிறான். மோகத்தின் படலம் அத்தனை அடர்வாக இருப்பதால் இறைவனைப் பற்றிச் சிந்திக்கக்கூட அவனுக்கு நேரம் கிடைப்பது இல்லை. அந்த மகாபுருஷர்கள் உங்களுக்காக நேரம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாக, அந்தக் கர்மம் என்றால் என்ன? என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கர்மத்தைச் செய்வதை மட்டுமே கீதை ஏற்றுக் கொள்கிறது. கீதை முக்கியமாக இதைத்தான் தருகிறது. உலகியல் சார்ந்த பொருட்களும் கீதையின் மூலமாகக் கிடைக்கிறது என்றாலும் கூட மிகவும் உயர்வான 'ச்ரேய' எனப்படும் ஆன்மீகவியலுடன் ஒப்பிடும்போது 'ப்ரேய' எனப்படும் உலகியல் போகங்கள் எல்லாம் மதிப்பற்றவைகளாகும்.

**யோகத்தை அளிப்பவர்:-**

யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில் பரம நன்மையை அளிக்கவல்ல ஆன்மீகப் பாதையைப் பற்றிய அறிவு, ஆன்மீக சாதனை, மற்றும், இறைவனை அடையப் பெறுதல் ஆகியவை அனைத்தும் ஸத்குருவின் மூலமாகவே சாதகமாகிறது. புண்ணியத் தலயாத்திரை என்ற பெயரில் இங்குமங்கும் சுற்றியலைவதாலோ, அல்லது, கடுமையான உடல் அலைச்சலுடன் வெட்டித்தனமாக உழைத்துக் கொண்டிருப்பதாலோ எல்லாம் இவை கிடைத்து விடுவதில்லை. ஏதேனும் ஒரு அனுபவம் பெற்ற மகாபுருஷர் (ஸந்த் – அனைத்து சந்தேகங்களும் நீங்கப் பெற்று இறைவனில் நிலை பெற்றவர்.) மூலமாகவே இவற்றை எல்லாம் அடைய முடியும். நான்காவது அத்தியாயம் முப்பத்தி நான்காவது சுலோகத்தில் ஸ்ரீகிருஷ்ணர், "அர்ஜுனா! நீ ஏதேனும் ஒரு தத்துவதரிசியாகிய மஹாபுருஷரின் சரணத்தை அடைந்து, நல்லமுறையில், அவரை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி, கபடமற்ற உள்ளத்துடன் அவருக்குச் சேவை செய்து, கேள்விகள் கேட்டு, அந்த ஞானத்தை அடையப் பெறுவாயாகுக!

எனவே, இறைவனை அடையப் பெறுவதற்கு, ஏதேனும் ஒரு மகாபுருஷருடைய சரண சான்னித்தியம், மற்றும் அவருக்குச் சேவை செய்தல் என்றொரு உபாயம் மட்டுமே உள்ளது. அவருடைய வழிகாட்டுதலுக்கு ஏற்பச் சென்று, யோகம் கைகூடப் பெறுகின்ற காலத்தில் அந்த ஞானமாகிய அறிவினை அடைவாயாக!" என்றார். பதினெட்டாவது அத்தியாயம் பதினெட்டாவது சுலோகத்தில் அவர், "பூரண ஞானம் பெற்றவர், (பரிக்ஞாதா) அதாவது, தத்துவதரிசி மகாபுருஷர், 'ஞானம்' அதாவது, இறைவனை நேரடியாக தரிசனம் செய்து அறிந்து கொள்வதற்கான விதிமுறை, மற்றும், 'ஜ்ஞேயம்' அதாவது, இலட்சியமாகிய அந்தப் பரமாத்மா – இந்த மூன்றுமே கர்மத்திற்கான தூண்டுணர்வைத் தருபவை ஆகும்" என்கிறார். ஆகவே, ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில், மகாபுருஷர்தான் கர்மத்திற்கான நுழைவாயில் ஆவாரே ஒழிய, வெறும் புத்தகம் அன்று. நூல் வெறும் குறிப்பேடு மட்டும்தான். வெறுமனே குறிப்பேட்டினை மனப்பாடம் செய்து கொண்டிருப்பதால் மட்டுமே எவரும் வியாதியில் இருந்து குணமடைந்து விடுவதில்லை. மாறாக, அதனைச் செயல்முறைப்படுத்த வேண்டும்.

**நரகம்:–**

பதினாறாவது அத்தியாயம் பதினாறாவது சுலோகத்தில் அசுரச் செல்வங்களைப் பற்றி விளக்கமாகக் கூறும்போது யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், "எண்ணற்ற விதங்களில் நிலை குலைந்து போயிருக்கும் சித்தத்தை உடைய, மோகத்தின் வசமாகச் சிக்கிக் கொண்டிருக்கின்ற அசுர சுபாவத்தை உடைய மனிதர்கள் புனிதமற்ற, கீழ்த்தரமான நரகத்தில் விழுகிறார்கள்" என்றார். அப்படியென்றால் இந்த நரகம் என்றால் என்ன? நரகம் என்று எதைச் சொல்கிறார்கள்? என்றொரு கேள்வி எழுவது இயல்பானதுதான். இதே தொடர்ச்சி அறுந்து போகாமல் அவர், "என்னிடம் பகைமையுணர்வு வைத்திருக்கும் அந்த, மனிதர்களில் தாழ்ந்தவர்களை, கீழ்த்தரமானவர்களை நான் மீண்டும் மீண்டும் அசுரப் பிறவிகளிலேயே தள்ளுகிறேன். எப்பொழுதுமே அசுரப் பிறவிகளிலேயே தள்ளுகிறேன். இதுவே நரகம் ஆகும்" என்றார். இந்த நரகத்தின் நுழைவாயில்கள் எவை? அவர் அதற்கு, "காமம், கோபம் மற்றும் லோபம் (பேராசை) என்று நரகத்திற்கு மூன்று நுழைவாயில்கள் உள்ளன. இவற்றில்தான் அசுரச் செல்வங்கள் அனைத்தும் இயக்கநிலை பெற்றுச் செயல்படுகின்றன" என்றார். ஆகவே, மீண்டும் மீண்டும் புழு, பூச்சி மற்றும் மிருகம் முதலான தாழ்ந்த பிறவிகளில் பிறப்பதுவே 'நரகம்' ஆகும்.

**பிண்ட தானம்:-**

முதல் அத்தியாயத்தில் மனவருத்தத்தால் குழப்பமுற்றிருந்த அர்ஜூனனுக்கு, ''யுத்தத்தினால் விளையப்போகும் மனித இனப் படுகொலையினால் (நரஸம்ஹாரம்) பித்ரு லோகத்தில் வாழ்ந்து வருவதாகக் கருதப்படும் மூதாதையருக்கு வழக்கமாக அளிக்கப்பட்டு வருகின்ற 'பிண்ட தானம்', மற்றும், 'தர்ப்பணம்' ஆகிய செயல்கள் எல்லாம் அழிந்து போய்விடும். அதனால், மூதாதையர்கள் உணவு கிடைக்காமல் தங்கள் உலகங்களை இழந்து, தவறிக் கீழே விழநேரிடும்" என்றவொரு பயம் உண்டானது. இதுபற்றி பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "அர்ஜூனா! உனக்கு இந்த அஞ்ஞானம் எங்கிருந்து உண்டானது" என்றார். பிண்டோதகக் கிரியையை ஸ்ரீகிருஷ்ணர் அஞ்ஞானம் என்று கூறினார். மேலும் அவர், "எந்தமுறையில் கிழிந்தும், நைந்தும் பழையதாகிப்போன இந்த ஆடைகளைத் தூக்கியெறிந்து விட்டு மனிதன் புதிய ஆடைகளை அணிந்து கொள்கிறானோ, அதேபோன்றுதான், இந்த ஆன்மா பழையதாகிப்போன இந்த உடலைத் துறந்து விட்டு, அடுத்தக் கணமே வேறு உடல் என்னும் புதிய ஆடையை உடனே ஏற்றுக் கொண்டு விடுகிறது. இங்கே, உடல் என்பது வெறும் ஆடை மட்டும்தான். மேலும், இந்த ஆன்மாவானது ஆடையைத்தான் மாற்றிக் கொண்டதே தவிர, இறந்து போய்விடவில்லை. அழியும் உடலைத்தான் மாற்றிக் கொண்டது. அதனுடைய அகஅமைப்பில் இன்றுவரை எந்த மாற்றமும் இன்றி அப்படியேதான் இருக்கிறது எனும்போது இந்த உணவு (பிண்ட தானம்), இருக்கை, படுக்கை, சவாரி, இருப்பிடம், தண்ணீர் முதலானவற்றை தானம் செய்வது எவரைக் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படுகிறது? யோகேஷ்வரராகிய ஸ்ரீகிருஷ்ணர் இதனை அஞ்ஞானம்' என்று கூறியதற்கு இதுவே காரணம் ஆகும். பதினைந்தாவது அத்தியாயம் ஏழாவது சுலோகத்திலும் (15/7) கூட அவர் இதையே வலியுறுத்தும் விதமாக, "இந்த ஆன்மாவானது சனாதன அம்சம் ஆகும். எனது ஆன்ம வடிவமே ஆகும். மேலும் இது மனத்துடன் சேர்த்து ஐந்து புலன்களின் செயல்பாடுகளால் உருவாக்கப்பட்ட வினைகளைச் சுமந்து கொண்டு, மற்றொரு உடலை ஏற்றுக் கொள்கிறது. மேலும், மனத்தையும் சேர்த்து மொத்தம் ஆறு புலன்களின் வாயிலாக அடுத்ததாகக் கிடைத்த உடலைக் கொண்டு விஷயங்களை அனுபவிக்கத் தொடங்குகிறது'' என்கிறார். ஆன்மாவானது எந்த உடலை ஏற்றுக் கொண்டுள்ளதோ, அங்கேயும் அதற்கான விஷய அனுபவத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைக்கவே செய்கின்றன எனும்போது இந்தப் பிண்டதானம் ஏன் தரப்படுகிறது?

இங்கே ஒரு உடலை விட்டது. அங்கே மற்றொரு உடலை ஏற்றது. அது நேரடியாகவே அடுத்த உடலுக்குள் போய்விடுகிறது. இதற்கு நடுவில் வேறு எந்த ஓய்வறையும் இல்லை, வேறுஒரு இடமும் இல்லை. (அங்கெல்லாம் நமது

ஆயிரமாயிரம் தலைமுறைகளைச் சேர்ந்த மூதாதையர்கள் நீண்ட நெடுங்காலமாகக் கிடந்து கொண்டு இருப்பதாகவோ, மற்றும், அவர்களுடைய வாழ்க்கை, வம்சாவழியினரின் கைகளை நம்பிக்கொண்டு நடந்து வருவதாகவோ மற்றும் அவர்கள் கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகளைப் போன்று அழுதுகொண்டு இருப்பதாகவோ, அவர்களுக்கான 'பிண்டோதகக் கிரியை' சரியாக நடத்தப்படவில்லை என்றால் தங்களுக்குக் கிடைத்த உலகங்களில் இருந்து தவறிக் கீழே விழுந்து விடுவதாக எண்ணிக் கொண்டிருப்பதோ எல்லாம் அஞ்ஞானம் மட்டுமே தவிர, வேறொன்றுமில்லை). எனவேதான், ஸ்ரீகிருஷ்ணர் இதனை 'அஞ்ஞானம்' என்று கூறினார்.

**பாவம் மற்றும் புண்ணியம்:–**

இந்தப் பிரச்சினையிலும் சமுதாயத்தில் பல்வேறுவிதமான குழப்பங்கள் நிலவி வருகின்றன. ஆனால், யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தரையில், "ரஜோ குணத்தால் தோன்றிய இந்தக் காமம் மற்றும் கோபம் ஆகியவை புலனின்ப அனுபவங்களை அனுபவித்தும் ஒருபோதும் திருப்தியடையாத மாபெரும் பாவிகள் ஆகும். அதாவது காமம் மட்டுமே கடும் பாவியாவான்" என்கிறார். காமம் மற்றும் எண்ணற்ற ஆசைகளே, பாவத்தின் ஊற்றுக் கண் ஆகும். இந்த ஆசைகள் எங்கே வாழ்கின்றன? அதற்கு ஸ்ரீகிருஷ்ணர், "புலன்கள், மனம் மற்றும் புத்தி ஆகியவையே இவற்றின் வாழுமிடங்கள் ஆகும்" என்கிறார். எப்பொழுது இந்தத் தீய எண்ணங்கள் எனப்படும் விகாரங்கள் உடலில் அன்று, மாறாக, மனத்தில்தான் வாழ்கின்றன என்றாகிவிட்டபோது உடலை மட்டும் தூய்மை செய்து கொண்டு இருப்பதால் என்ன பயன் விளைந்து விடும்?

ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில், "இறைவனுடைய திருநாமத்தை ஜபம் செய்வதால் தியானம் செய்வதால் இந்த மனம் தூய்மை அடைகிறது; சமகாலத்தைச் சேர்ந்த எவரேனும் ஒரு தத்துவதரிசி மகாபுருஷரின் சேவையால் அவரிடமே சமர்ப்பணம் செய்வதால் இந்த மனம் தூய்மை அடைகிறது." நான்காவது அத்தியாயம் முப்பத்தி நான்காவது சுலோகத்தில் (4/34) அவரிடம் சமர்ப்பணம் செய்தல் முதலானவற்றை எல்லாம் உற்சாகப்படுத்தும் வகையில் அவர், **"தத் வித்தி ப்ரணி பாதேன' –** சேவைகள் புரிந்து, கேள்விகள் கேட்டு, அந்த ஞானத்தை அடையப் பெறுவாயாக! அந்த ஞானத்தை அடைவதன் மூலமாகவே அனைத்துப் பாவங்களும் தொலைகின்றன" என்றார்.

அவர் மூன்றாவது அத்தியாயம் பதின்மூன்றாவது சுலோகத்தில், "வேள்வியில் எஞ்சுகின்ற (பிரம்மமாகிய) அன்னத்தை உண்கின்ற சாது மக்கள் (சாதகர்கள்) எல்லாவிதமான பாவங்களில் இருந்தும் விடுதலை பெற்று

விடுகின்றனர். மேலும், எவரெல்லாம் உடல் சார்ந்த புலனின்ப விஷயங்களின் மீது ஆசை வைத்துள்ளனரோ, அந்தப் பாவிகள் பாவத்தையே உண்கிறார்கள்" என்கிறார். இங்கே, 'வேள்வி' எனப்படுவது ஆன்ம சிந்தனையாகிய நிச்சயிக்கப்பட்டுள்ள கிரியை ஆகும். அதில் மனத்தில் படிந்துள்ள ஒட்டு மொத்த உலகம் தொடர்பான அனைத்து வினைகளும் அழிக்கப்பட்டு விடுகிறது. இந்த வேள்விச் செயல்களில் எஞ்சுவது பிரம்மமாகிய இறைவன் மட்டும்தான். ஆகவே, உடல் பிறப்பதற்கு எது காரணமாக அமைகிறதோ, அதுவே 'பாவம்' ஆகும். மேலும், எது அமிருத தத்துவத்தைப் (மரணமில்லாப் பெருவாழ்வு) பெற்றுத் தருகிறதோ, அதற்குப் பிறகு ஒரு போதும் உடல் எடுக்க வேண்டியதில்லையோ, அதுவே 'புண்ணியம்' ஆகும்.

அவர் ஏழாவது அத்தியாயம் இருபத்தி ஒன்பதாவது சுலோகத்தில் (7/29) "என்னுடைய சரணத்தை அடைந்து பிறப்பு இறப்பு மற்றும் எல்லாவிதமான குற்றம் குறைகளில் இருந்தும் விடுபடுவதற்காக, முயற்சி மேற்கொள்கின்ற, புண்ணிய கர்மத்தைச் செய்வதன் மூலம் எந்த மனிதர்களுடைய பாவம் அழிந்து போய்விட்டதோ, அவர்கள் பிரம்மத்தை முழுமையான அளவிலும், எல்லாக் கர்மங்களையும், அத்யாத்மம் என்பதையும் முழுமையான முறையில் அறிவதுடன் என்னையும் மிகவும் நல்லமுறையில் அறிகின்றனர். அவ்வாறு அறிந்து அவர்கள் என்னிலேயே நிலை பெற்று விடுகின்றனர்" என்கிறார். ஆகவே, பிறப்பு, இறப்பு மற்றும் எல்லாவிதமான குற்றம் குறைகளில் இருந்தும் நம்மை விடுவித்து, என்றும் நிலையாக இருக்கும் இறைவனை நேரடியாக தரிசனம் செய்வித்து, அவரிலேயே, நம்மை நிலைபெறச் செய்யும் வல்லமை படைத்தது எதுவோ, அதுவே, 'புண்ணிய கர்மம்' ஆகும். மேலும், பிறப்பு, இறப்பு, வாழ்க்கை, மரணம், துக்கம், குற்றம், குறைபாடு ஆகிய வட்டத்திற்குள்ளேயே நம்மைச் சுற்றியலைய வைத்துக் கொண்டிருப்பது எதுவோ, அதுவே 'பாவ கர்மம்' ஆகும்.

அவர் பத்தாவது அத்தியாயம் மூன்றாவது சுலோகத்தில் (10/3), "எவர் பிறப்பு, இறப்பு நீங்கப் பெற்றவரும் ஆரம்பம், முடிவு நீங்கப் பெற்றவரும் எல்லா உலகங்களின் மாபெரும் இறைவனுமாகிய என்னை நேரடியாக தரிசனம் செய்து (சாட்சாத்காரத்துடன்) அறிந்து கொள்கிறாரோ, அவரே மரணத்தின் ஆளுமைக்கு உட்பட்ட இந்த மனிதர்களிலேயே ஞானவான் எனப்படுகிறார். மேலும், அவர் என்னை அவ்வாறு அறிந்து எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை (முக்தி) பெற்று விடுகிறார்" என்கிறார். ஆகவே, இறைவனை நேரடியாக தரிசனம் செய்து (சாட்சாத் காரத்துடன்) அறிந்து கொண்டதுடனேயே எல்லாப் பாவங்களில் இருந்து விடுதலை கிடைக்கிறது.

சாராம்சம் இதுதான்: "மீண்டும் மீண்டும் பிறப்பு, இறப்பிற்குக் காரணம் எதுவோ, அதுவே 'பாவம்' ஆகும். மேலும், அதிலிருந்து காப்பாற்றி, என்றும் நிலையான பரமாத்மாவை நோக்கி நம்மைத் திருப்பி விடுகின்ற, பரம அமைதியைப் பெற்றுத் தருகின்றது எதுவோ, அதுவே 'புண்ணிய கர்மம்' ஆகும். உண்மை பேசுதல், சுய உழைப்பில் வாழ்தல், பெண்கள் அனைவரையும் அன்னையாக எண்ணிப் போற்றல், நேர்மை முதலானவை எல்லாம் இந்தப் புண்ணிய கர்மத்தைச் செய்வதற்கு உதவிபுரிகின்ற துணை அங்கங்கள் ஆகும். ஆனால், அனைத்தையும் விட, மிகவும் மேலான, போற்றுதலுக்குரிய புண்ணியம் எதுவென்றால் 'பரமாத்மாவை அடைதல்' என்பதே ஆகும். எது, பரமாத்மா ஒருவரிடம் மட்டுமே கொண்டுள்ள நம்பிக்கையை முறிப்பதாக அமைகிறதோ, அதுவே 'பாவம்' ஆகும்.

**ஸாதுக்கள் அனைவரும் ஒருவரே:-**

ஸ்ரீகிருஷ்ணர், நான்காவது அத்தியாயம் முதலாவது சுலோகத்தில், "இந்த அழிவற்ற யோகத்தை, கல்பத்தின் ஆரம்பத்தில் நானே சூரியனிடம் கூறினேன்" என்கிறார். ஆனால், ஸ்ரீகிருஷ்ணருக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த வரலாற்றிலோ, இதிகாசங்களிலோ அல்லது வேறு எந்த சாஸ்திரங்களிலோ ஸ்ரீகிருஷ்ணருடைய பெயர் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

உண்மையில், ஸ்ரீகிருஷ்ணர் ஒரு முழுமையான, பூரணத்துவ நிலையை அடைந்த யோகேஷ்வரர் ஆவார். அவர் புலன்உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்ப்பட்ட இறைப்பேருணர்வு மற்றும் அழிவற்ற இறையுணர்வில் நிலைபெற்றவர் ஆவார். எப்பொழுதாவது, இந்தப் பரமாத்மாவிடம் இணைப்பை ஏற்படுத்துகின்ற ஆன்மீகச் செயல் அதாவது, 'யோகத்திற்கான ஆரம்பம் இயக்குவிக்கப்படுகிறதென்றால், இந்த உயர் ஆன்மீக நிலையை அடையப்பெற்ற ஏதேனும் ஒரு மகாபுருஷர் மூலமாகவே நடைபெற்று வந்திருக்கிறது. அவர் **ஸ்ரீராமராக** இருந்தாலும் சரி! **ரிஷி ஜரதுஷ்டராக** இருந்தாலும் சரி! வெவ்வேறு காலகட்டங்களில் **இயேசு கிறிஸ்து, முஹம்மது, குருநானக்,** முதலானோர் மற்றும் வேறு எந்தவொருவரின் மூலமாகவும் கூறப்பட்ட உபதேசமே ஸ்ரீகிருஷ்ணராலும் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, எல்லா மகாபுருஷர்களும் சமமானவர்களே. அவர்கள் அனைவருமே ஒரே மூலப் பரம்பொருளையே தொட்டுணர்ந்து, ஒரே ஆன்ம வடிவத்தைத்தான் அடையப் பெறுகிறார்கள். இந்த ஆன்மீகப் பாதையொரு தனிப் பெரும் இலக்காகும். எத்தனையோ பேர் இந்தப் பாதையில் செல்லலாம். ஆனால், அவர்கள் எல்லோருமே ஒருவேளை இலட்சியத்தை அடைந்து

விட்டார்களேயானால், இருக்கின்ற அந்த ஒரே இறைவனையே அடையப் பெறுகிறார்கள். அவ்வாறு இறைவனை அடையப் பெற்ற நிலையில் உள்ள சாதுவின் உடல் அவர்களைப் பொறுத்தவரையில் வெறுமனே தங்கும் வீடாக மட்டுமே அமைகிறது. அவர்களோ தூய்மையான ஆன்ம வடிவத்தில் நிலை பெற்று விட்டவர்கள். அத்தகைய நிலையை அடைந்தவர்கள் எப்போதாவது ஏதாவது சொன்னார்கள் என்றால், 'ஒரு யோகேஷ்வரே கூறுகிறார்' என்று அர்த்தமாகிறது.

சாதுக்கள் (ஸந்த்) எங்கெங்கோ பிறக்கிறார்கள். கிழக்கு திசையில் அல்லது மேற்கு திசையில், கறுப்பினம் அல்லது வெள்ளையர் குடும்பத்தில், நீண்ட நெடுங்காலமாகவே தர்மத்தைப் பின்பற்றி வாழும் நாகரீகமானவர்களுக்கு நடுவில் அல்லது நாடோடிக் கூட்டத்தில், சாதாரண வாழ்க்கை நடத்துகின்ற ஏழைகளின் இனத்தில், அல்லது, பெரும் செல்வந்தர்களுக்கு மத்தியில் அவர்கள் பிறப்பெடுத்தாலும் கூட, எந்தவொரு குறிப்பிட்ட பரம்பரையையும் அவர்கள் சார்ந்திருப்பதில்லை. அவர்கள் தங்களுடைய இலட்சியமாகிய பரமாத்மாவின் மீது மட்டுமே பிடிப்புணர்வைக் கொண்டு ஆன்ம வடிவத்தை நோக்கித் தீவிரமாக முன்னேறிச் செல்லத் தொடங்கி விடுகின்றனர், அதுவாகவும் மாறிவிடுகின்றனர். அவர்களுடைய உபதேசங்களில் உயர்ந்த தாழ்ந்த ஜாதிவேற்றுமை, சமுதாய வர்க்க வேற்றுமை, மற்றும், பணக்காரன் ஏழை என்ற தடுப்புச் சுவர்கள் எவையும் இருப்பது இல்லை. 'அவர்களுடைய பார்வையில் ஆண்–பெண் என்ற வேற்றுமை உணர்வுகூட இல்லை' என்ற அளவிற்கு உயர்வானதாக அமைந்துள்ளது. (பார்க்கவும், கீதை 15/16– **'த்வாவிமௌ புருஷௌலோகே')**

மகா புருஷர்களுக்குப் பிறகு, அவர்களைப் பின்பற்றியவர்கள்தான் தங்களுக்கென்று சம்பிரதாயங்களை ஏற்படுத்திக் கொண்டு, குறுகிய மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றனர். ஏதேனும் ஒரு மகாபுருஷரைப் பின்பற்றியவர்கள் 'யூதர்கள்' என்று தங்களை அழைத்துக் கொண்டால், மற்றவர்களைப் பின்பற்றியவர்கள் 'கிறிஸ்தவர்கள்', 'முஸ்லீம்கள்', 'சனாதனிகள்' என்றெல்லாம் கூறிக் கொள்கின்றனர். ஆனால், இந்த வேற்றுமையை உண்டாக்குகின்ற தடுப்புச் சுவர்களுக்கும் அந்த சாதுக்களுக்கும் எந்தவொரு தொடர்பும் ஒருபோதும் இருப்பது இல்லை. சாதுக்கள் எந்தவொரு சம்பிரதாயத்தையோ அல்லது சாதியையோ சேர்ந்தவர்கள் அல்ல. சாது சாதுவேதான். அவர்களை எந்தவொரு சமுதாய அமைப்புடனும் இணைத்து நோக்கக் கூடாது.

ஆகவே, உலகம் முழுவதும் தோன்றிய சாதுக்களை, அவர்கள் எந்தவொரு இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, ஏதோவொரு குறிப்பிட்ட மதப் பிரிவினரால் மட்டுமே அதிகமாக வழிபடப்படுபவராகவே இருந்தாலும், சரி,

அத்தகைய சம்பிரதாய உணர்வு மேலீட்டுடன் அந்த சாதுக்களைப் பற்றி இழிவாகக் பேசவே கூடாது. ஏனெனில், அவர்கள் இவற்றிற்கெல்லாம் அப்பாற்ப்பட்டவர்கள் ஆவர். உலகில் எந்த மூலையில் பிறந்த சாதுவாக இருந்தாலும் சரி, அவரை நிந்திக்கக் கூடாது, ஒருவேளை எவரேனும் அவ்வாறு செய்வாரேயானால், அவர் தமது அகத்தில் நிலைபெற்றுள்ள அந்தர்யாமி பரமாத்மாவிற்கே துன்பம் விளைவிக்கிறார்; அவரைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று பொருள். அவர் பரமாத்மாவிடம் இருந்து வெகுதூரம் விலகிச் செல்லும் வகையில் நீண்டதொரு இடைவெளியை ஏற்படுத்திக் கொள்கிறார், மற்றும், தம்மைத்தாமே கெட்டழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் என்றே கொள்ள வேண்டும். இவ்வுலகில் பிறந்தவர்களிலேயே, ஒருவேளை உங்களுடைய உண்மையான நலம் விரும்பி என்று எவரேனும் இருந்தால், அவர் இந்த சாதுவைத் (ஸந்த்) தவிர வேறு யாராகவும் இருக்கமுடியாது. ஆகவே, அவர்களிடம் நல்லிதயத்துடன் கூடிய அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டியது உலகில் வாழும் அனைவருடைய மிகவும் முக்கியமான கடமையாகும். இதைச் செய்யத் தவறினால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம், அவ்வளவுதான்.

**வேதம்:–**

கீதையில் வேதத்தைப் பற்றிய வர்ணனை நிறையவே இடம் பெற்றுள்ளது. ஆனால் ஒட்டு மொத்தமாகச் சொல்வதென்றால் வேதம் என்பது ஆன்மீகச் சாலையில் தூரத்தை அறிவிக்கின்ற மைல்கல் (Mile Stone), அடையாளச் சின்னம் மட்டுமே ஆகும். இலட்சியத்தை அடைந்துவிட்ட ஒருவருக்கு அதனுடைய உபயோகம் அத்துடனே முடிவடைந்துவிடுகிறது. ஸ்ரீகிருஷ்ணர் இரண்டாவது அத்தியாயம் (2/45) நாற்பத்தி ஐந்தாவது சுலோகத்தில், "அர்ஜுனா! வேதம் மூன்று குணங்கள் வரை மட்டும்தான் வெளிச்சம் பரப்பும் திறனுடையதாக இருக்கிறது. நீ வேதங்களின் காரியச் க்ஷேத்திரத்தில் இருந்து விடுபட்டு மேலே போ!" என்கிறார். அவரே, இரண்டாவது அத்தியாயம் நாற்பத்தி ஆறாவது சுலோகத்தில் (2/46) "எல்லாப் பக்கங்களில் இருந்தும் பரிபூரணமான தூய்மையான, மாபெரும் நீர்த்தேக்கம் அடையப் பெற்றபிறகு, சிறியநீர்க் குட்டைகளால் மனிதர்களுக்கு எவ்வளவு உபயோகம் இருக்க முடியும்? அதே அளவுதான், நல்ல முறையில், பிரம்மத்தை அறிந்த மகாபுருஷர், அதாவது, பிராம்மணருக்கும் வேதங்களின் பயன்பாடும் இருக்கிறது! ஆனால், மற்றவர்களுக்கு என்னவோ அதன் உபயோகம் இருக்கவே செய்கிறது" என்கிறார். அவர் எட்டாவது அத்தியாயம், இருபத்தி எட்டாவது சுலோகத்தில் (8/28), "அர்ஜுனா! என்னைத் தத்துவநிலையில், மிகவும் நல்ல முறையில், அறிந்து கொண்டபிறகு யோகியானவர், வேதம், வேள்வி, தவம், தானம் முதலானவற்றின் புண்ணியப் பலன்களைக்

கடந்து சென்று, என்றும் மாறாத, சனாதனப் பதத்தினை அடையப் பெறுகிறார்" என்றார். அதாவது, எதுவரை வேதம் இருக்கிறதோ, வேள்வியில் இன்னும் செய்யப்பட வேண்டிய பகுதியானது மீதமிருக்கிறதோ, அதுவரை, சனாதனப் பதத்தை அடையப் பெறமுடியாது, மேலும் அவர் பதினைந்தாவது அத்தியாயம் ஒன்றாவது சுலோகத்தில் (15/1), "மேல்பாகத்தில், பரமாத்மாவே எதனுடைய வேராக இருக்கிறாரோ, கீழ்ப்பாகத்தில், புழு, பூச்சி உலகங்கள் முதலான இயற்கை எதனுடைய கிளைகளும் உட்கிளைகளுமாக உள்ளனவோ, அத்தகைய, வாழ்க்கை என்பது அரச மரத்திற்கு ஒப்பாகத் தோன்றும் அழிவற்றதொரு மாபெரும் மரமாகும். எவர் இதனை வேருடன் சேர்த்து அறிந்து கொள்கிறாரோ, அவரே வேதத்தை அறிந்த அறிஞர் ஆகிறார்" என்கிறார். இந்த, வேதத்தை அறிவதற்கான ஒரேவழி மகாபுருஷரும் அவர் மூலமாக நிச்சயிக்கப்பட்டுள்ள இறைவழிபாடும்தான். புத்தகங்களும் வேத பாடசாலைகளும் அந்த இறைவனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுணர்த்துகின்றன, அவ்வளவுதான்.

**ஓம்:–**

ஸ்ரீகிருஷ்ணருடைய தெய்வத் திருவாணைப்படி 'ஓம்' என்ற இறைத் திருநாமத்தை ஜபம் செய்வதற்கான விதிமுறை உள்ளது. அவர், ஏழாவது அத்தியாயம் எட்டாவது சுலோகத்தில் (7/8)," ஓங்காரம் நான்தான்" என்கிறார். மேலும், அவர் எட்டாவது அத்தியாயம், பதின்மூன்றாவது (8/13) சுலோகத்தில், "ஓம்' என்னும் திருமந்திரத்தை ஜபம் செய் என்னுடைய திருவுருவத்தை (ஸத்குருவின் திருவுருவம்) தியானம் செய்" என்கிறார். அவரேதான், ஒன்பதாவது அத்தியாயம், பதினேழாவது சுலோகத்தில் (9/17), "அறியத் தகுதிபடைத்த, புனிதமான ஓங்காரம் நானே ஆவேன்" என்கிறார். அவர், பத்தாவது அத்தியாயம் முப்பத்தி மூன்றாவது சுலோகத்தில் (10/33), " எழுத்துகளில் நான் 'அ' கரம் ஆவேன்" என்றார். மேலும் அவர் பத்தாவது அத்தியாயம் இருபத்தி ஐந்தாவது சுலோகத்தில் (10/25), "சொற்களில் ஒரெழுத்துச் சொல்லான 'ஓம்' நான்தான்" என்கிறார். அவரே தொடர்ந்து பதினேழாவது அத்தியாயம், இருபத்தி மூன்றாவது சுலோகத்தில் (17/23), "ஓம், தத் மற்றும் ஸத் ஆகியவை பிரம்மத்தை அறிமுகப்படுத்துவன" என்கிறார். அவர், பதினேழாவது அத்தியாயம் இருபத்தி நான்காவது சுலோகத்தில் (17/24), "வேள்வி, தானம் மற்றும் தவம் ஆகிய செயல்கள் 'ஓம்' என்னும் இறைத் திருநாமத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றன" என்று கூறுகிறார். ஆகவே, ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில் 'ஓம்' என்னும் இறைத் திருநாம ஜபம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதற்கான விதிமுறையை ஏதேனும் ஒரு அனுபவம் வாய்ந்த மகாபுருஷரிடமிருந்தே கற்றறிய வேண்டும்.

### கீதையில் கூறப்பட்டுள்ள ஞானமே தூய்மையான மனுஸ்ம்ருதி:–

கீதை ஆதிமனிதர் எனப்படும் மஹாராஜா மனு அவர்களுக்கு முன்பே வெளிப்படுத்தப்பட்டு விட்டது. **'இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவானஹ மவ்யயம் (4/1)'**– "அர்ஜுனா! இந்த அழிவற்ற யோகத்தை நானே கல்பத்தின் ஆரம்பத்தில் சூரியனிடம் கூறினேன். மற்றும், சூரியன், மனுவிடம் கூறினார். மனு இதனை நன்கு கேட்டுணர்ந்து (ச்ரவணம்) தம்முடைய நினைவில் பதித்துக் கொண்டார். ஏனெனில், கேட்டுணர்கின்ற எதுவானாலும் மனத்தின் ஞாபக சக்தியில் (ஸ்ம்ருதி) தான் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்படுகிறது. இதையேதான் மனு அவர்கள் ராஜா இக்ஷ்வாகுவிடம் கூறினார். இக்ஷ்வாகுவிடம் இருந்து ராஜ ரிஷிகள் அறிந்து கொண்டனர். மேலும், இந்த மகத்துவம் வாய்ந்ததும், அழிவற்றதுமான யோகம் இதே உலகத்தில் மறைந்து போய்விட்டது" என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர். ஆரம்பத்தில், சொல்கின்ற, மற்றும், கேட்டுணர்கின்ற 'செவி வழியறிதல் பரம்பரை' இருந்தது. 'எழுதுவது' என்றொரு பழக்கத்தைப் பற்றிக் கற்பனைகூடச் செய்யப்படாத காலம் அது. மனு மஹராஜ் இதனை மனத்தின் நினைவாற்றலில் (ஞாபகசக்தி – ஸ்ம்ருதி) தக்க வைத்துக்கொண்டு 'செவிவழியறிதல்' (ஸ்ம்ருதி ஞானம்) பரம்பரையை ஆரம்பித்து வைத்தார். எனவேதான் இந்தக் கீதையில் கூறப்பட்டுள்ள ஞானமே தூய்மையான மனு ஸ்ம்ருதி ஆகும்.

பகவான் இந்த ஞானத்தை மனு மஹராஜ் அவர்களுக்கும் முன்பே சூரியனிடம் கூறியிருக்கும்போது, இதை ஏன் **'சூரிய ஸ்ம்ருதி'** என்று சொல்லக் கூடாது? என்றொரு கேள்வியை எழுப்பலாம். உண்மையில், இங்கே 'சூரியன்' எனப்படுவது ஜோதிமயமான, எந்த பரமாத்மாவில் இருந்து ஒரு அம்சமாக, இந்த மானுடப் படைப்பு உருவாக்கப்பட்டதோ' அதையே குறிப்பிடுகிறது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "நான்தான் மேலான உயிருணர்வு (பரம சேதனம்) என்னும் விதையை விதைக்கின்ற தந்தை ஆவேன். இந்த இயற்கை அதனைக் கர்ப்பத்தில் தாங்குகின்ற தாய் ஆகும். அந்த மேலான, உயிருணர்வு (பரம சேதனம்) எனப்படும் விதை வடிவமாகிய தந்தையே இங்கே 'சூரியன்' என்று உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. பரமாத்மாவின் எந்த ஜோதிமயமான தெய்வீக ஒளியில் இருந்து இந்த மானுடம் உற்பத்தி ஆனதோ, அந்த தெய்வீக ஒளியிலேயே கீதையில் கூறப்பட்டுள்ள ஞானம் வெளிப்படுத்தப்பட்டு விட்டது. இதைத் தவிர, 'சூரியன்' எனப்படுவது யாரோ ஒரு தனி நபரைக் குறிப்பிடுவதல்ல, மாறாக, உயிர்கள் படைக்கப்பட்ட அந்த இறைவனின் தெய்வீக ஒளி வடிவத்தையே இங்கே 'சூரியன்' என்கிறோம். எனவேதான் 'சூரியனிடம் கூறினேன்' என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். சூரியன் தன்னுடைய மகனான மனுவிடம் கூறினார். எனவேதான்

இதனை 'மனுஸ்ம்ருதி' என்கிறோம். சூரியன் தனி நபரைக் குறிப்பதன்று; விதை வடிவைக் குறிப்பதாகும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்:

"அர்ஜுனா! அதே பழைமையான யோகத்தையே நான் உனக்காகக் கூறப் போகிறேன். நீ என்னுடைய பிரியமான பக்தன், (அனன்ய) இணைபிரியாத தோழன் ஆவாய்" என்கிறார். அர்ஜுனன் மகாமேதையாகவும் நல்லதொரு தகுதிபடைத்த அதிகாரியாகவும் இருந்தான். அவன் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் என்று ஒரு பெரிய கேள்வித் தொடர்சங்கிலியையே ஸ்ரீகிருஷ்ணருக்கு (எதிரில்) முன்பு எழுப்பிவிட்டான். அவன் ஸ்ரீகிருஷ்ணரிடம், "உங்களுடைய பிறவி இப்போதுதான் நிகழ்ந்தது, ஆனால், சூரியனின் பிறவியோ, எப்பொழுதோ, மிகவும் முன்பே நிகழ்ந்து விட்டது. இந்நிலையில் நீங்கள்தான் சூரியனிடம் கூறினீர்கள் என்பதை எப்படி நான் ஏற்றுக் கொள்வது? என்பதைப் போன்று இருபது, இருபத்தி ஐந்து கேள்விகளை அவன் கேட்டான். கீதை முடிவடையும் நிலையை எட்டிய சமயத்தில், அவனிடமிருந்து எல்லாக் கேள்விகளும் தீர்ந்து போன நிலை வந்தது. அப்போது பகவான், அர்ஜுனனால் எழுப்பவே முடியாமல் இருந்த, அவனுடைய நன்மையை உள்ளடக்கியிருந்த, ஒரு கேள்வியைத் தாமாகவே முன்வந்து எழுப்பினார்; அதற்கு விடையும் அளித்துச் சமாதானப்படுத்தினார். இறுதியில் பகவான், "அர்ஜுனா! நீ என்னுடைய உபதேசங்களை எல்லாம் ஒருமுகப்பட்ட சித்தத்துடன் கேட்டுணர்ந்தாயா? மோகத்தால் தோன்றிய உன்னுடைய அஞ்ஞானம் அழிந்ததா, என்ன?" என்று கேட்டார். அதற்கு அர்ஜுனன் பின்வருமாறு கூறினார்:

**நஷ்டோ மோஹ : ஸ்ம்ருதிர்லப்தா த்வத் ப்ரஸாதான் மயாச்யுத**
**ஸ்த்திதோஸ்மி கதஸந்தேஹ : கரிஷ்யே வசனம் தவ (18/73)**

பகவானே! என்னுடைய மோகம் அழிந்தது. நான் எனது நினைவைத் (ஸ்ம்ருதி) திரும்பவும் பெற்று விட்டேன்; வெறுமனே கேட்க மட்டும் செய்யாமல் நினைவில் நன்கு பதித்துக் கொண்டேன். நான் உங்களுடைய கட்டளையை நிறைவேற்றுவேன்; யுத்தம் செய்வேன். அவன் வில்லை ஏந்தினான்; யுத்தம் நிகழ்ந்தது; வெற்றியும் கிடைத்தது, தூய்மையும் புனிதமும் நிறைந்ததொரு தர்மப் பேரரசு நிறுவப்பட்டது. மேலும், ஒரே தர்ம சாஸ்திரம் என்னும் வடிவில், அதே **ஆதி தர்ம சாஸ்திரமாகிய கீதை** அனைவருக்கும் முன்னால் மீண்டும் தோன்றியது.

கீதை உங்களுடைய **ஆதி தர்ம சாஸ்திரம்** ஆகும். இதுவே **மனுஸ்ம்ருதியும்** ஆகும். இதையே அர்ஜுனன் தன்னுடைய நினைவில் பதித்துக்

கொண்டான். மனுவிற்கு இரண்டு விஷயங்கள் கிடைத்ததாகக் குறிப்பு உள்ளது. ஒன்று, தந்தையின் மூலமாகக் கிடைத்த கீதை, மற்றொன்று, வேதம். இது இறைவனால் மனுவிற்கு வெளிப்படுத்தப்பட்டது. மூன்றாவது எதுவும் மனுவின் காலத்தில் அவருக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அந்தச் சமயத்தில் எழுதுகின்ற பழக்கம் எதுவும் வழக்கத்தில் இல்லாமல் இருந்தது. காகிதம், எழுதுகோல் எதுவுமே புழக்கத்தில் இல்லாத காலம் அது. எனவேதான் ஞானமானது 'ஸ்ருத்' அதாவது 'கேட்பது' மற்றும் 'கேட்பதை நினைவுப்படலத்தில் பதிய வைத்துக் கொள்கின்ற' பரம்பரை உருவாக்கப்பட்டது. எவரிலிருந்து 'மானுடம்' தழைத்தோங்கியது என்று கூறப்படுகிறதோ, படைப்பின் ஆதி மனிதன் என்று போற்றப்படும் அந்த மனு மகராஜ், வேதத்திற்கு 'ஸ்ருதி' என்றும் கீதைக்கு 'ஸ்ம்ருதி' என்றும் மரியாதை அளித்துள்ளார்.

வேதம் மனு மகராஜ் அவர்களுக்கு முன்பு இறங்கியது. அவர் அதைக் கேட்டார். அது கேட்கும் தகுதி படைத்தது. அதற்குப் பிறகு ஒருவேளை மறந்தே போய் விட்டாலும்கூட ஒன்றும் குறைந்து போய்விடாது. ஆனால், கீதையோ ஸ்ம்ருதியாகும். எப்போதும் நினைவில் வைத்துப் போற்றப்பட வேண்டியது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் என்றும் நிலையான வாழ்வு, என்றும் நிலையான அமைதி, என்றென்றும் நிலையான செல்வம், தெய்வீக மகிமை பொருந்திய ஆன்மீகப் பெருவாழ்வைப் பெற்றுத்தருகின்ற தெய்வீகப் பாடலாகும்.

பகவான் கூறினார்: "அர்ஜுனா! ஒருவேளை நீ ஆணவத்திற்கு ஆட்பட்டு என்னுடைய உபதேசங்களைக் கேட்கவில்லையென்றால் முழுவதுமாக அழிவடைந்து விடுவாய்." அதாவது, கீதையின் உபதேசங்களை அலட்சியம் செய்பவன் அழிவடைவான். பகவான், பதினைந்தாவது அத்தியாயம் இருபதாவது சுலோகத்தில் (15/20), " **'இதி குஹ்யதமம் சாஸ்த்ரமித முக்தம் மயானக' –** இந்த மறைபொருள் இரகசியங்களுக்கெல்லாம் இரகசியமாகிய சாஸ்திரம் என்மூலமாகக் கூறப்பட்டது. இதனைத் தத்துவப்பூர்வமாக அறிந்து கொண்டு நீ பூரண அறிவு மற்றும் மேலான, உயர்ந்த, இறைநிலையை அடையப் பெறுவாயாகுக!" என்கிறார். மேலும் அவர் பதினாறாவது அத்தியாயத்தில் கடைசி இரண்டு சுலோகங்களில் (16/23,24) " **'ய சாஸ்திரவிதி முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத:' –** இந்த சாஸ்திர விதியைத் துறந்து விட்டு, ஆசைகளால் தூண்டப்பட்டவனாக, மற்ற பிற விதிகளின் மூலமாக எவரெல்லாம் இறைவழிபாடு செய்கிறார்களோ, அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவொரு சுகமும் இல்லை, செல்வமும் இல்லை, மற்றும், பரமகதி எனப்படும் இறைப்பேறு நிலையும் கிடையாது" என்கிறார்.

**“தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்ய வ்யவஸ்த்திதௌ’ –** “எனவே, அர்ஜுனா! உனது கடமை எது? மற்றும், எது கடமை இல்லை? என்பதைப் பகுத்தறிந்து கொள்வதில் இந்த சாஸ்திரமே பிரமாணமாக (இறுதிச் சான்று) அமைகிறது. இதனை மிகவும் நல்லமுறையில் ஆழ்ந்து கற்க வேண்டும். அதற்குப் பிறகு நடைமுறையில் கடைப்பிடித்து வா! நீ என்னில் வாழ்வாய்! என்னுடைய அழிவற்ற இறைப் பேறுநிலையை அடையப் பெறுவாய்! என்றும் நிலையான வாழ்வு, என்றும் நிலையான அமைதி, மற்றும், என்றும் நிலையான செல்வத்தை அடைவாய்!”

கீதை **மனுஸ்ம்ருதி** ஆகும். மேலும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரைப் பொறுத்தவரையில் **கீதையே தர்ம சாஸ்திரம்** ஆகும். வேறு எந்த சாஸ்திரமும் இல்லை. வேறு எந்த ஸ்ம்ருதியும் கிடையாது. இன்று, சமுதாயத்தில் உலவுகின்ற பல்வேறு வகையான ஸ்ம்ருதிகள் எல்லாம் கீதையை நாம் மறந்து போய் விட்டதால் (விஸ்ம்ருதி) உண்டான தீயவிளைவுகளாகும். இத்தகைய ஸ்ம்ருதிகள் எல்லாம் ஒருசில மன்னர்களின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்டு, எழுத்து வடிவம் பெற்றவை ஆகும். சமுதாயத்தில் உயர்ந்த தாழ்ந்த வர்க்க பேதங்களை உருவாக்கி, மனிதர்களுக்கிடையில் தடுப்புச் சுவரை எழுப்பி, அவர்களை ஒன்றுபடவிடாமல் பார்த்துக் கொள்வதே இவற்றின் நோக்கமாகும். மனுவின் பெயரால் புழக்கத்தில் நிலவி வருகின்ற, அல்லது, மனுவினால் சொல்லப்பட்டதாகப் பெயரிடப்பட்டுள்ள மனுஸ்ம்ருதியில் அந்த மனு மஹராஜ் வாழ்ந்த காலத்தைப் பற்றிய புறச் சூழ்நிலைகளின் வர்ணனைகள் இல்லவே இல்லை. மூல மனுஸ்ம்ருதியாகிய கீதை பரமாத்மா ஒருவரையே சத்தியம் (உண்மை) என்று ஏற்றுக் கொண்டுள்ளது. அவருள் நுழைவு பெறச் செய்கிறது. ஆனால், நிகழ்காலத்தில் புழக்கத்தில் உள்ள ஏறத்தாழ நூற்றி அறுபத்தி நான்கு (164) ஸ்ம்ருதிகளின் பரமாத்மாவில் பெயர் கூட இடம் பெறவில்லை. அவரை அடைவதற்கான விதிமுறைகளின் மீதும் விளக்கம் இல்லை. அவை வெறுமனே, ‘சொர்க்கத்தை அடைவது பற்றிய ஆசை வார்த்தைகளை உள்ளடக்கியதாகவும் **‘ந அஸ்தி’** – எதற்கு நிலைத்தன்மை இல்லையோ அது இல்லவே இல்லை. அதை நோக்கிச் செல்வதற்காக உற்சாகப்படுத்துகின்றன. ஆன்ம விடுதலை, அதாவது, மோட்சத்தைப் பற்றிய எந்தக் குறிப்பும் அதில் இடம் பெற்றிருக்கவில்லை.

**மகாபுருஷர்:–**

மகாபுருஷர் புறம் மற்றும் அகம் சார்ந்த செயல்பாடுகள், மற்றும் ஆன்மீகம், உலகியல், உள்ளது உள்ளவாறு, யதார்த்தமான முறையில் வேதம், மற்றும், அது சார்ந்த நெறிமுறைகள் ஆகிய இரண்டு வெவ்வேறுபட்ட விஷயங்களைப் பற்றியும் தெள்ளத்தெளிவான அறிவினைப் பெற்றுள்ளனர். மஹாபுருஷர்களால் ஒட்டு

மொத்த மனித சமுதாயத்திற்கும் வாழ்வியல், நடைமுறையியல் சார்ந்த விதிமுறைகளை வகுத்துத் தருவதற்கும் அவர்கள் அனைவருக்கும் வரைமுறைக்கு உட்பட்ட வாழ்க்கையை அமைத்துத் தருவதற்கும் முடிந்தது என்றால் அதற்கு இதுவே காரணம் ஆகும். **வசிஷ்டர், விஸ்வாமித்திரர், யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர், மகாவீரஸ்வாமி, மகாத்மா புத்தர், மோசஸ், இயேசு கிறிஸ்து, முகம்மது, இராமதாஸர், தயானந்த சரஸ்வதி, குரு கோவிந்த்சிங்** முதலான நூற்றுக்கணக்கான மகாபுருஷர்கள் இத்தகைய பணியை மேற்கொண்டிருந்தனர். ஆனால் இந்தப் புறம் சார்ந்த அமைப்பியல் எல்லாம் அந்தந்த காலகட்டங்களுக்கு மட்டுமே பொருந்துவனவாகும். ஏற்கனவே, சீர்குலைந்து போயிருக்கும் சமுதாயத்திற்குப் பொருளியலை, அதாவது, உலகியல் சார்ந்த பொருள் முதல் வாத அறிவினைத் தருவது யதார்த்தமானது அன்று. உலகியல் பொருட்கள் எல்லாம் கணநேரத்திற்கானவையே; நிலையானவையன்று. எனவேதான், அவற்றிற்கான புற அமைப்பியல் கோட்பாடுகளும் அந்தந்த காலத்திற்கு மட்டுமே பொருந்துவனவாக இருக்கிறது. அவற்றையெல்லாம் பண்டைக்காலம் தொட்டே பழகி வரப்படுகின்ற புராதன சமூக அமைப்பியல் என்ற வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

**அமைப்பாளர்:–**

முதலில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள சீர்குலைவுகளை எல்லாம் மகாபுருஷர்கள் சரி செய்கிறார்கள். ஒருவேளை அவற்றையெல்லாம் நெறிப்படுத்தவில்லை என்றால் ஞானம், வைராக்கியம் ஆகியவற்றில் இருந்து பிறக்கின்ற மேலான பரம்பொருளை அடைவதற்காகச் செய்யப்படும் ஆன்மீக சாதனையைப் பற்றிச் சொன்னால் யார் கேட்பார்கள்? மனிதன் எத்தகைய சூழ்நிலையில் சிக்கிக் கொண்டு இருக்கிறானோ, அவனை முதலில் அங்கிருந்து அப்புறப்படுத்தி, உள்ளதை உள்ளபடிக்கு அறியச் செய்கின்ற நிலைக்கு அவனைத் தயார் செய்வதற்காகப் பல்வேறு விதமான உத்திகளை எல்லாம் கையாள வேண்டியுள்ளது. இதற்காக வேண்டியே, மகாபுருஷர்கள் எந்தெந்த வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துகிறார்களோ, ஏதேனும் அமைப்புகளை எல்லாம் உருவாக்குகிறார்களோ அவையெல்லாம் தர்மம் அன்று. அவற்றின் மூலமாக வேண்டுமானால் நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு உபயோகப்படுகின்ற அளவு ஏதேனும் ஒரு அமைப்பியல் கிடைக்கலாம். நானூறு, அறுநூறு ஆண்டுகளுக்கு வேண்டுமானால் ஒரு முன்னுதாரணமான அமைப்பாக அது திகழலாம். மேலும், ஆயிரம், இரண்டாயிரம் வருடங்களிலேயே அந்தச் சமூகம் சார்ந்த அமைப்பு முறைகள் அனைத்தும் புதிய மாதிரியான சூழ்நிலைகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல் உயிரற்றுப் போய்விடுகின்றன. குரு கோவிந்த்சிங் வாழ்ந்த காலகட்டத்தில் ஆயுதம் தரித்திருத்தல் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது.

இன்றைய நிலையிலோ அந்த வாட்களை எல்லாம் தற்காப்பு ஆயுதங்கள் என்ற பெயரில் வைத்திருப்பது பொருத்தமானதா என்ன? 'இயேசு கிறிஸ்து கழுதையின் மீது உட்கார்ந்தார்' – (மத்தியாள் 21) கழுதைகள் தொடர்பாக அவரால் வகுக்கப்பட்ட சட்டத்தினால் இன்றைக்கு என்ன பயன் இருக்கிறது? அவர் கூறினார்: "எவருடைய கழுதையையும் திருடாதே!" இன்று யார் கழுதைகளை வளர்க்கிறார்கள். இதேபோன்றுதான் யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய காலத்தில் சமுதாயத்திற்குத் தேவையான முழுமையான அமைப்பியல் கோட்பாடுகளை உருவாக்கித் தந்தார். அவற்றைப் பற்றிய விளக்கம் எல்லாம் மகாபாரதம், பாகவதம் முதலான நூல்களில் இருக்கின்றன. அத்துடன் சேர்த்தே, இந்த நூல்களில் எல்லாம் உள்ளது உள்ளபடியான யதார்த்தத்தையும் இங்குமங்கும் விவரித்துள்ளார். பரமநன்மையைத் தரவல்லதாகிய ஆன்மீக சாதனை மற்றும் உலகியல் சார்ந்த அமைப்பியல் கோட்பாடுகளுக்கான தமது கட்டளைகளை எல்லாம் ஒரே இடத்தில் கலந்து வைத்து விட்டால், மக்களால், தத்துவத்தை நிர்ணயம் செய்கின்ற வரிசைக் கிரமத்தை முழுக்க முழுக்க அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். அவர்கள் உலகியல் சார்புடைய கொள்கைகளை எல்லாம் உள்ளது உள்ளபடியாக எடுத்துக் கொள்ளாமல், பெரியதாக உருப்படுத்திக் கொண்டு முதலில் அவற்றை மட்டுமே விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். ஏனெனில், அவையெல்லாம் உலகியல் சார்புடையவை அல்லவா! அதனால்தான். இதையெல்லாம், 'அந்த மகாபுருஷரே கூறியுள்ளார்!' என்று சொல்லிக் கொண்டு இந்த உலகியல் அமைப்புமுறைகளுக்கெல்லாம் காரணகர்த்தாவென்று அந்த மகாபுருஷர்களை வாழ்த்திக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், அந்த மகாபுருஷர்கள் மூலமாகச் சொல்லப்பட்டதை தங்களுக்கு ஏற்றவகையில் எல்லாம் வளைத்தும் திரித்தும் அதற்கு ஒரு பிழையான தோற்றத்தைக் கொடுத்து விடுகின்றனர். **வேதம், இராமாயணம், மகாபாரதம், பைபிள், குர்ஆன்** ஆகிய அனைத்திலுமே பண்டைக்கால அணுகுமுறைகள் கலந்துள்ள சிந்தனைவோட்டங்களே பின்புலமாகக் காணப்படுகின்றன. புறஉலகில், தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துகின்ற மக்கள் சமுதாயம் அவற்றில் உள்ள விளக்கங்களை எல்லாம் அவற்றின் ஸ்தூல வடிவம்வரை மட்டுமே புரிந்து கொள்ளும் திறனுள்ளதாக இருக்கிறது. எனவேதான், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் என்றும் நிலையான பரமபதம் (இறைப் பேறுநிலை), என்றும் நிலையான வாழ்வு, என்றும் நிலையான அமைதியை அளிக்கவல்ல கீதை சாஸ்திரத்தை உலகியல் சார்ந்த அமைப்பு முறைகளில் இருந்தெல்லாம் முழுவதுமாகப் பிரித்து எடுத்து விட்டார். மகாபாரதம் இந்தியாவின் பிரம்மாண்டமான இதிகாசம் மற்றும் கௌரவம் வாய்ந்த ஆன்மீகப் பண்பாட்டியல் சாஸ்திரம் ஆகும். அவர் இந்த விசாலமான இதிகாசத்தின் மத்தியில் இதனைப் பாடியுள்ளார். அதன்மூலமாக, எதிர்காலச் சந்ததியினர் அனைவரும் இந்த தர்ம சாஸ்திரத்தைத் தர்மம் சார்ந்த பின்புலத்துடன்

தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளட்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். காலப்போக்கில் மகரிஷி பதஞ்சலி முதலான பல்வேறு மகாபுருஷர்களும்கூட, மேலான, உயர்வான பரம நன்மைக்கான, ஆன்மீகப் பாதைக்கான, உள்ளது உள்ளபடியான யதார்த்த விதிமுறைகள் அனைத்தையும் உலகியல் சார்ந்த பின்புலத்தில் இருந்து விடுவித்துத் தனியாக, ஆன்மீகம் மட்டுமே பின்புலமாக இருக்கும் வகையில் நூல்களை இயற்றி மக்களுடைய பார்வைக்கு முன்வைத்துள்ளனர்.

**கீதை மனிதர்களுக்கானது மட்டும்**

பகவான் இந்த தர்ம சாஸ்திர உபதேசத்தை, **'ப்ரவ்ருத்தே ஷஸ்த்ர ஸம்பாதே'** (கீதை 1/20) – ஆயுதங்களைப் பிரயோகிக்கப் போகின்ற சமயத்தில் செய்தார். ஏனெனில், உலகம் எனப்படும் இந்த வாழ்க்கையில் ஒருபோதும் அமைதியோ அல்லது சுகமோ கிடைக்கவே போவதில்லை என்பதை அவர் நன்றாகவே அறிவார். கோடிக்கணக்கான மக்களைக் கொன்றழித்த பிறகும்கூட வெற்றி என்பது என்னவோ, வீணான, பலனற்ற கற்பனைதான். மேலும், கடைசியில் எல்லோருமே மனவெறுப்பைத்தான் அடையப் போகிறார்கள். எனவேதான் அவர், எதில் ஒருமுறை வெற்றி பெற்று விட்டால் என்றும் நிலையான வெற்றி, என்றென்றைக்குமான வாழ்க்கை, மற்றும், அழிவற்ற இறைப்பேறு ஆகியவை கிடைக்குமோ, அத்தகைய, என்றும் நிலையான ஆன்மீக யுத்தம் பற்றிய அறிமுகத்தை, கீதையின் வாயிலாக அறிவித்து அருளினார். இதில், சொல்லப்பட்டுள்ள அனைத்தையும் அடைவது மனிதர்களுக்கு மட்டும் எப்போதுமே சுலபமானது ஆகும். இதையே க்ஷேத்திர – க்ஷேத்திரக்ஞருக்கு இடையிலான மோதல், இயற்கை, புருஷருக்கு இடையிலான மோதல், ஆழ்மனத்தில் தீயவற்றின் அழிவு மற்றும் நல்லதாகிய பரமாத்ம வடிவத்தை அடைவதற்கான ஆன்மீக சாதனை என்கிறோம்.

ஆன்மீக வாழ்க்கைக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருந்த உத்தம அதிகாரிகளுக்கு மட்டுமே அவர் இதைக் கூறினார். ஸ்ரீகிருஷ்ணர் திரும்பத் திரும்ப அர்ஜுனனிடம், "என்மீது மிகவும் பிரியம் வைத்துள்ள பக்தனாகிய உன்னுடைய நலனில் விருப்பம் கொண்டுதான் நான் இதைக் கூறுகிறேன்" என்றார். இது உயர்வான மறைபொருள் இரகசியத்திலும் பரமரகசியம் ஆகும். கடைசியில் அவர், "எவன் எனது பக்தன் இல்லையோ, பொறுமையாகக் காத்திருந்து, அவனை இந்தப் பாதைக்கு அழைத்து வரமுயற்சி செய். அதற்குப் பிறகு அவனுக்காக இதைச் சொல்" என்றார். இது, அனைத்து மனிதர்களுக்கானது மட்டுமாகும். அவர்களுக்கு யதார்த்தமான பரம நன்மையை ஏற்படுத்தவல்ல ஒரேயொரு சாதனை இது மட்டுமே ஆகும். அதற்கான, வரிசைக்

கிரமமான வர்ணனைதான் ஸ்ரீகிருஷ்ணரால் கூறப்பட்டுள்ள இந்தக் கீதையாகும்.

**இந்த உரையைப் பற்றி:-**

யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணரின் மூலமாக உள்ளது உள்ளபடிக்குத் தெளிவாக்கப்பட்ட ஸ்ரீமத் பகவத் கீதை என்ன சொல்ல விரும்புகிறது என்பதை உள்ளது உள்ளபடியாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தால் இங்கே வழங்கப்பட்டுள்ள இந்த உரைக்கு, **'யதார்த்த கீதை'** என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த உரை பகவானுடைய அகத்தூண்டுணர்வை ஆதாரமாகத் தாங்கியுள்ளது. கீதை தன்னில்தானே முழுமையான ஆன்மீக சாதனை நூல் ஆகும். ஒட்டுமொத்தக் கீதையிலும் சந்தேகத்திற்கு இடமளிக்கின்ற வகையில் ஒரு இடம்கூட இல்லை. எங்கெல்லாம் சந்தேகம் எழுகிறதோ, அவற்றையெல்லாம் உலகியல் கண்ணோட்டத்தைக் கொண்டு மட்டும் புரிந்து கொள்ள முடியாத நிலை இருப்பதால், அவ்வாறு தோன்றுகிறது. ஆகவே, எங்கேயாவது புரியவில்லை என்று தோன்றுமேயானால் எவரேனும் ஒரு தத்துவதரிசி மகாபுருஷடைய சரண சான்னியத்தை அடைந்து அவற்றை எல்லாம் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

**தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா**
**உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ் தத்வ தர்சின:**
**ஓம் சாந்தி:! சாந்தி!! சாந்தி!!!**
**வேண்டுகோள்**

'யதார்த்த கீதை' யோகேஷ்வரர் ஸ்ரீகிருஷ்ணருடைய மேலான, புனிதம் வாய்ந்த தெய்வத் திருவாக்காகிய ஸ்ரீமத் பகவத் கீதையின் அர்த்தமே ஆகும். இதில், உங்களுடைய இதயத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவை அடைவதற்கான விதிமுறைகள் மற்றும் இறைவனை அடைந்த பிறகு நிறைவேற்றப்படும் இறைப்பணி ஆகிவற்றைப் பற்றிய விளக்கம் இடம் பெற்றுள்ளது. அலட்சியமான கண்ணோட்டத்துடன் இதைப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால் நாம் நம்முடைய இலட்சியத்தை அறிந்து கொள்ள முடியாமல் ஏமாற்றமடைய வேண்டியிருக்கும். இதனை நம்பிக்கைப் பூர்வமாக, ஆழ்ந்து கற்பதன் மூலமாக மானுடம் தனது பரம நன்மைக்கான சாதனையை அடைந்து நிறைவு காணும். மேலும், சிறிதளவு இதைப்பற்றி அறிந்து கொண்டாலும் கூட மேலான, உயர்வான ஆன்மீக வாழ்வினை அடைய முடியும். ஏனெனில், இந்த இறைப்பாதையில் ஆரம்பத்திற்கு ஒருபோதும் அழிவு என்பதே கிடையாது.

ஸ்வாமி. அட்கடானந்தர்.

ஹரி ஓம் தத் சத்

## *ஒரு வேண்டுகோள்*

ஞானாசிரியர் ஸ்ரீ கிருஷ்ணரால் அருளப்பட்ட ஸ்ரீமத் பகவத் கீதையின் உன்னதமான பேருரை தான் இந்த யதார்த்த கீதை என்பதாகும். நம் இதயங்களில் உறையும் ஆன்மா படிப்படியாக எவ்வாறு பேரருள் கொண்ட பரமான்மா நிலையை அடைகிறது என்பதை நன்றாக விளக்குகிறது.

கீதையை வேதாந்தக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். இல்லையேல் இலக்கு தவறி பாதை மாறி போய் விடக் கூடும். கீதையைப் படித்து பின்பற்றுவதன் மூலம் மனித சமுதாயம் முழுமையும் மேன்மை அடைந்து வெற்றி கொள்ள முடியும். அவர்கள் இதன் ஒரு சிறு பகுதியை கற்று கடைபிடித்து ஒழுகினாலும் பேரின்ப நிலையை எட்ட முடியும். இந்த பாதையில் தொடர்ந்த பயணம் என்றும் பயனற்றுப் போவதில்லை.

**— ஸ்வாமி அட்கடாநந்தா**

# ஒலிப் பேழை (ஆடியோ கேசட்)யில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திற்கான முன்னுரை

1. கீதை ஒரு முழுமையாக உபதேச தொகுப்பாகும். எல்லாம் வல்ல பரமாத்மாவிற்கு பணிவன்புடன் சமர்ப்பிக்கப்பட்டது. எல்லோரும் புனிதத் தன்மையோடு விளங்கிட விடுக்கப்பட்ட ஓர் அழைப்பு மடல். பணக்காரன் அல்லது ஏழை, உயர்குடியில் பிறந்தவன் அல்லது அனாதை, நல்ல நெறியுடையோன் அல்லது தீயவன், ஒரு பெண் அல்லது ஓர் ஆண், கற்புடையோர் அல்லது கயவன் என யாராக இருந்தாலும், அண்டத்தின் எந்த மூலையில் வசிப்பவனாக இருந்தாலும் எல்லோரும் இதனைப் பெற்று பயனடைய தகுதியுடையதாய் இருக்கிறது. குறிப்பாக கீதை, மக்கள் இந்த உலக பந்தங்களால் கட்டுண்டு அடை பட்டிருக்கும் தளைகளை தகர்த்தெறிந்து மேன்மையடையச் செய்ய அமைக்கப்பட்ட ஆன்மீகப் பாதை. சிலர் முன்பே நன்னெறிமுறைகளை கடை பிடித் தொழுகும் சான்றோர்களாகவும், தியானம் வழிப்பட்ட சீலர்களாகவும் திகழ்கிறார்கள். விலை மதிக்க வொண்ணா பிரபச்ஞு உபதேசம் இங்கே மீண்டும் வழங்கப்படுகிறது.

2. திருமறை நூல்கள் முக்கியமாக இரண்டு நோக்கங்களுக்காக படைக்கப்பட்டவை. ஒன்று சமுதாய நெறிமுறைகளையும் கலாச் சாரங்களையும் பேணி காப்பதற்காக... மக்கள் முன்னோர் வழி நடந்து சென்ற பாதையில் அடியொற்றி நடந்து பயன் பெற வேண்டும் என்பதற்காகும். மற்றொன்று மக்கள் பரமாத்மாவை அடைந்து பேரின்ப நிலையை எட்ட முடியும் என்பதை உணர வைப்பதற்காகும்.

   இராமாயணம், பைபிள், குரான் முதலான திருமறை நூல்கள் இவ்விரு கோட்பாடுகளையும் விரிவு பட எடுத்துரைக்கின்றன. ஆனால் இந்த உலகத்தில் பெரும்பாலான மக்கள் உடனடியான நன்மை கருதி பொருள் சார்ந்த வாழ்க்கையையே விரும்புகிறார்கள். திருமுறை நூல்களிலும் இதுபற்றிய குறிப்புகள் சமுதாயத்திற்கு பயன் தரும் செய்திகள் விரவியுள்ளன. ஆகவே, வேத வியாசர் மகாபாரதம் எனும் இதிகாசத்தைப் படைக்கும்போது, அதன் ஓர் அங்கமான கீதையில் சமூகம் மற்றும் ஆன்மீகம் இரண்டினையும் வலியுறுத்துகிறார். இருப்பினும் தனியே எந்த ஒரு குடிமகனைப் பற்றியோ, எந்த ஒரு சமயக் கோட்பாடுகளை குறித்தோ, சடங்கு, சம்பிரதாயம் பற்றியோ ஒரு வரியில் கூட சொல்லப்படவில்லை. பொதுவாக மக்கள் சமயக் கருத்துக்களை, என்றென்றும்

மானிடவர்கம் பொது கருத்துக்களோடு சேர்த்து குழப்பிக் கொள்ளக்கூடாது. கீதை புனிதமானது. காலவரையறையற்ற ஆன்மீக கோட்பாடுகளுக்கு வழியமைத்துக் கொடுக்கிறது.

3. கீதை எந்த ஒரு தனி நபர், குறிப்பிட்ட இனம், மதம், இடம், காலம் அல்லது மரபு வழி வந்த கலாச்சாரம் குறித்து எழுதப்பட்டதல்ல. இப்புவி முழுமைக்கும் உரியது. அழிவற்ற ஆன்மீகம் குறித்த ஆய்வுக்கட்டுரைக்கு ஒப்பானது. இன்னும் ஒரு படி மேலாகச் சொல்ல வேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு சமயத்திற்கும், ஒவ்வொரு உயிரினத்திற்கும் உரியது. உண்மையில் அது ஒவ்வொருவருக்கும் எவ்விடத்திற்கும் உரியது. கீதை, மனித இனம் முழுமைக்குமான ஓர் ஆன்மீக நூல் ஆகும்.

   கீதை நம்முடைய சொந்த சமய பாட நூல் என சொல்லிக் கொள்வது நமக்கு பெருமையல்லவா ? அது நமக்கு வழங்கப்பட்ட அருளாசி அல்லவா ?

4. சமண மதத்தை நிறுவிய மதிப்பிற்குரிய பகவான் மகாவீரர், பௌத்த கொள்கைகளை உலகறியச் செய்த பகவான் புத்தர் இருவரும் முழுமையாய் இறைவனை உணர்ந்தவர்கள். கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை தனித்தனியே தங்களுடைய உரையின் மூலம் எளிய நடையில் பாமரமக்களுக்கு வெளிப்படுத்தியவர்கள்.

   ‘‘ஆன்மா என்பது மட்டுமே உண்மை. மனதையும் புலன்களையும் முழுமையாய் அடக்கி வாழ தலைப்பட்டால் தன்னிலை உணரப்படலாம்.’’ இதுவே கீதை சொல்லும் சாரம்.

   கௌதம புத்தர் அந்த சாரம் மட்டுமே எல்லோருக்கும் உரியது அழிவற்றது என்றுரைக்கும் போது, அவர் கீதையின் முக்கிய போதனையை வலியுறுத்திக் கூறுகிறார்.

   பகவான் புத்தருடைய போதனைகள் என்று மட்டுமல்ல, எங்கெல்லாம் சமயத்தின் பேரால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் பெயரால், வழிபாடு, உணருதல், தவம் என்றெல்லாம் சொல்லப்படுகிறதோ அனைத்தையும் உள்ளடக்கமாக கொண்டு விளங்குவது கீதை. மனித இனத்தின் திருமறை நூல் வித்து இது. இங்கு யதார்த்த கீதையில் அதே பாடங்கள் ஸ்வாமி ஸ்ரீ அட்கடாநந்தா அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்படுகிறது. அது ஒலிப் பேழை வடிவில் வழங்கப்படுகிறது. எனவே இந்த உலகப் பொது அறிவை உலகமுழுமையுமான மனித இனம் கேட்டுப் பயனடை முடியும்.

5. இந்தியாவின் நாட்டுப்புறக்கதைகளுள் ஒன்று. அதில் ஒரு வரலாற்றுச் செய்தி. கிரேக்க நாட்டின் மாபெரும் தத்துவ ஞானியான அரிஸ்டாட்டிலும், அறிவுலகின் மாமேதையான சாக்கிரடீஸும் மாவீரன் அலெக்சாண்டரிடம் நாடுகளை வெற்றி கொண்டு தாயகம் திரும்பும் போது ஆன்மீக மெய்ஞானிகளின் பிறப்பிடமான புண்ணிய பூமி இந்தியாவிலிருந்து ஞானிகளால் ஆன்மீக்க கருவூலம் என போற்றப்படும் ஸ்ரீமத் பகவத் கீதையை கொண்டுவரும் படி கேட்டுக்கொண்டார்களாம்.

பரம்பொருள் ஒன்றே என்ற முடிவான உண்மையை உணர்த்திய கீதையின் கருத்தை பற்பல மொழிகளில், வெவ்வேறு கால கட்டங்களில் மோஸஸ், இயேசு, மற்றும் பற்பல ஸூஃபி ஞானிகளால் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. மொழி மற்றும் கலாச்சார வேறுபாடு காரணமாக மா பெரும் அறிஞர் பெருமக்கள் கூறியவை யாவும் வெவ்வேறாகத் தோன்றலாம். ஆனால் ஆய்ந்து பார்க்கும் போது அவை யாவும் கீதையில் அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் கூறிய அறிவுரைகளோடு ஒத்துப்போவதைப் பார்க்கலாம். மாற்றுக் கருத்திற்கு இடமின்றி கீதை மனித இனம் முழுமைக்குமான ஓர் ஆன்மீகப் பாட நூல் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யதார்த்த கீதையை சாறு பிழிந்து கொடுத்திருப்பதன் மூலம் ஸ்வாமி அட்கடாநந்தா அவர்கள் மனித குலத்திற்கு மாபொரும் கொடையை தந்தருளியுள்ளார். அந்த எழுத்து வடிவை ஒலிவடிவமைத்து ஒலிப் பேழையாக உரு மாற்றித் தந்திருப்பதில் ஸ்ரீ ஜிதென்பாய் அவர்கள் நன்றிக் குரியவராகிறார்.

6. உலகத்தில் உள்ள எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஸ்ரீமத் பகவத் கீதையின் பிரதிபலிப்பு இருப்பதைக் காணலாம். ஸ்வாமி ஸ்ரீ அட்கடாநந்தாஜி அவர்களால் அருளப்பட்ட யதார்த்த கீதையை கேட்ட பிறகு சமண மதத்தில் பிறந்த ஸ்ரீ ஜிதேன்பாய் அவர்கள் அந்த பாடங்களை எல்லாம் ஒலிப்பேழை மூலம் வெளியிட வேண்டும் என எண்ணினார். இந்த எண்ணம் அவருடைய மனதில் உணரப்படக் காரணம் கீதையின் உபதேச சாரம், உலகம் முழுமையும் உள்ள ஆன்றோர்கள் மகாவீரர், கொதம புத்தர், குரு நானக், கபீர் முதலானோர்கள் அருளிய நல் வாக்கில் இடம் பெற்றிருப்பதாலேயேயாகும். எங்கும் தன்னையறிந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கை உடையவர்கள் பலர் இருக்கின்றார்கள். அந்த வேட்கையை தணித்துக் கொள்ள இந்த ஒலிப் பேழை மிகவும் உதவும்.

7. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கீதை உரைக்கப்பட்ட பொழுது மனித இனத்தால் அதனை அடையாளம் கொண்டு புரிந்து கொள்ள முடியவில்லை, இந்தியாவில் தோன்றிய புனித நூல்கள் வேதங்களும் உபநிடங்களும் ஆகும். இதன் கருத்துக்கள் உலகம் யாவும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். அக்காலத்தில் உபநிடதக் கருத்துக்கள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு நூல் என்றுணரப்பட்டது. அதாவது 'பரம் பொருளின் பாடல்' என்று பொருள். கீதையில் அனைத்தும் உண்டு. ஆன்ம வளர்ச்சிக்கு வழி காட்டும் பாதையும் உண்டு.

எந்த ஒரு திருமறையும் படித்து கற்றுணர்வதைக் காட்டிலும் கேட்டுணர்வதால் பயன் மிக உண்டு. காரணம் அதன் சுத்தமான ஒலி உச்சரிப்பு, இசையுடன் ஓதும் தன்மை. இதனால் நமது கவனம் முழுமையுமாக ஒன்றிணைக்கப்படுகிறது. தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. கீதையை அதன் உண்மை வடிவில் படைக்கப்படும் யதார்த்த கீதையின் ஒலிப்பேழையின் நோக்கம் அதுதான்.

இந்த ஒலிப் பேழைகளை கேட்பதன் மூலம் நமது குழந்தைகள் நன்கு பயனடைவார்கள், பரம்பொருளின் உன்னதமான பண்பாட்டை உட்கிரகித்துக் கொள்ளுவார்கள். நமது இல்லங்களில் அதன் சுற்றுப் புறங்களில் ''பகவத் கீதை''யின் ''தேவ லோகப் பாடலின்'' ஒலி அலைகள் பரவ புனிதத் தன்மையும் பரவும்.

8. இறைவனுடைய பெயர் உச்சரிக்கப்படாத வீடு ஒரு கல்லறையைப் போன்றது. இன்றைய அவசரமான பரபரப்பான உலகில் தன்னயைறிதல் பரம் பொருளை உணர்தல் வேண்டும் என்ற எண்ணம் சிலருக்கு மேலோங்கி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவர்கள் வழிபாடு செய்யவும், தியானம் செய்யவும் நேரத்தை ஒதுக்க முடியாமல் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் கீதை உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவ வேண்டும் என்றால் உலக அமைதிக்கான வளர்ச்சிக்கான விதை விதைக்கப்பட வேண்டும். பரமாத்மாவின் புனித சொற்களைத் தாங்கி வரும் 'பகவத் கீதை' ஆங்கிலத்தில் 'பரம் பொருளின் பாடல்' அல்லது 'தேவலோகப் பாடல்' என்று சொல்லப்படுகிறது. வழிபாடு மூலம் பேரின்ப நிலையடைய அனைவருக்கும் இத மிக மிக முக்கியம்.

9. நமது குழந்தைகள் நல்ல படிப்பாளிகளாக, பண்பாளர்களாக உருவாவதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். உன்னதமான பண்பாட்டில் சிறந்த வாழ்க்கை முறை இருக்கிறது, நம் அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு இருக்கிறது.

இக்கருத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இறையுணர்வுகளுக்கு தீர்வு இருக்கிறது. இக்கருத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இறையுணர்வை அறியும் போக்கில் இன்று யாரும் இல்லை. போதுமான செல்வம் படைத்த பலர் இறை சிந்தனை தேவையில்லை என எண்ணுகிறார்கள். (நண்பனாகவும் தேரோட்டியாகவும் இருந்த கிருஷ்ண பரமாத்மாவிடத்தில் அர்ஜுனன் நடந்து கொண்டது போல்). உலோகாயத செல்வங்களால் பெறப்படும் இன்பமும் பாதுகாப்பும் நிலையானதல்ல அந்த செல்வங்களின் மீது எவ்வளவுதான் பற்றுடையவர்களாய் இருந்தாலும் மரணத்தின் போது அனைத்தையும் விட்டுச் சென்றாக வேண்டும். இதனை நன்குணர்ந்த நாம், இந்த பரு உடலோடு இருக்கின்ற போதே பரம் பொருளை உணர்ந்து கொள்ளும் பக்குவம் பெற்று வழி நடக்க வேண்டும். யதார்த்த கீதையின் இந்த ஒலிப் பேழைகள் உருவாக்கப்பட்டதே அந்த மனப்பக்குவம் பெறப்பட வேண்டும் என்பதற்குத்தான்.

10. உலகத்தில் எத்தனை சமயங்கள் இருந்தாலும், எத்தனை சமயப்பிரிவுகள் இருந்தாலும் அத்தனையும் மெய்ஞானம் உணர்ந்த ஆன்மாக்களாலும் அவர்களுடைய ஆதரவாளர்களாலும் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டவை. ஞானிகள் தனித்த இடங்களை நாடி தேர்ந்தெடுத்து தியானம் செய்த இடங்கள் இன்று புனித தலங்களாகவும், ஆசிரமங்களாகவும், துறவி மடங்களாகவும், கோயில்களாகவும், தேவாலயங்களாகவும், மாறிவிட்டன. அங்கு மக்கள் தங்களை இணைத்துக் கொண்டு சாதாரண வாழ்க்கையிலிருந்து சுகமான வாழ்க்கைவரை அமைத்துக் கொண்டு ஆன்றோரின் பெயர் விளங்கச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஞானிகளுக்கு பீடம் அமைக்கிறோம். பீடம் அமைக்கப்படுவதாலேயே மேனிலை அடைந்துவிட முடியாது. உண்மையான ஞானாசிரியன் யார் என்றால் உண்மையாக மெய்யுணர்வு பெற்று தர்மத்தை கடைபிடிப்பவரே யாகும்.

சர் எட்வின் அர்னால்டு அவர்களின் ‘தேவ லோகப் பாடல்’ எனும் கீதையின் மொழி பெயர்ப்பு உண்மையிலே உன்னதமான திருமறை நூல் ஆகும். அது பூரண ஞானம் பெற்ற நல்லாசிரியர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. ஞானாசிரியர் கிருஷ்ணர் மற்றும் அவரது பக்தரும் ஆன்ம தாகம் கொண்ட நன்னெஞ்சுடைய அர்ஜுனருக்கும் இடையே நடந்த வாக்கு வாதம் தூய்மை கெடாது துல்லியமாக யதார்த்த கீதையின் ஒலிப்பேழை வழி தரப்படுகிறது.